பக்கங்கள்:07

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 26 வெள்ளிக்கிழமை 09.06.2023 கதிர்211

## 128 கிலோ கஞ்சா நேற்றுக்காலை சிக்கியது



ந.லோகதயாளன்.

வெற்றிலைக்கேணியில் 128 கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதிகளை நேற்றுக் காலை ☞2

## குவிந்து கிடக்கும் 3 தொண் ஹெரோயினை அழிக்க வழியின்றி அதிகாரிகள் திணறல்

கடந்த 3 வருடங்களில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சுமார் 3 தொண் ஹெரோயின் போதைப்பொருள் நீதித்திணைக்களம் மற்றும் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் குவிக்கப்பட்டுள்ளது. இவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றார்கள்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களை 1000 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் எரித்தே அழிக்கமுடியும், ஆனால் அதற்கான தகுந்த இடமோ வசதியோ இல்லாத காரணத்தால் ஹெரோயின் கையிருப்பு அதிகரித்துக்கொண்டே போவதாகப் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக் கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த ஹெரோயின் கையிருப்பை ஆழ்கடலில் கொட்டி மூழ்கடிக்க முடியும், ஆனால் அதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2020 முதல் கைப்பற்றப்பட்ட



ஹெரோயின் அவ்வளவும் சேமிப்பில் அப்படியே இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## இனி இது ரகசியம் அல்ல!

இனிமேல் உங்களுடன் பேசிப் பயனில்லை. எந்தத் தீர்வும் இன்னி இப்படிப் பேசுவதில் பயனுமில்லை. இனிமேல் எங்களைப் பேச்சுக்கு அழைக்காதீர்கள். அழைத்தாலும் வரமாட்டோம். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த ஆட்சி தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்கவில்லை என்றால் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கான தீர்வைக் கோரி எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு தலையைக் குத்தியபடியே கைகளின் முஸ்டியை இறுக்கியபடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் ஆணித்தரமாக உரைத்தார் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தர். ரணிலை நீண்ட காலமாக நம்பியிருந்து ஏமாந்துபோன கடும் விரக்தியும் விசனமும் அவரது பேச்சில் எதிர்ரொலித்தன. பொறுமையாகவும் நிதானமாகவும் ☞2

## உணவு நஞ்சானதால் இளம் தாய் உயிரிழப்பு

### மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மாங்காடு பிரதேசத்தில் சமைத்து உண்ட உணவு நஞ்சாகியதில் இளம் தாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளதுடன் 3 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

மாங்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான உஷேந்தினி (வயது 27) என்பவரே இல்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்து பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் சம்பவ தினமான இன்று மதிய உணவை உண்ட பின்னர் பிற்பகல் 2 மணியளவில் உயிரிழந்த பெண், அவரது 4 மற்றும் 7 வயது இரு குழந்தைகள், அவரது தாயார் உட்பட 4 பேர் வாந்தியெடுத்த நிலையில் மயங்கினர்.

அவர்கள் உடனடியாக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் 27 வயதுடைய பெண் உயிரிழந்தார். ஏனைய மூவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இனி இடைக்கால நிர்வாகம்தான்

## தேர்தல் நடத்தும் திட்டம் இல்லை என்று ரணில் திட்டவட்டம்

**மாகாண சபைகளுக்கோ உள்ளூராட்சி சபைகளுக்கோ இப்போதைக்குத் தேர்தல் நடத்தும் எண்ணம் ஏதுமில்லை, பதிலாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்காலச் சபை ஒன்றை அமைப்பதே தனது திட்டம் என்று நேற்றுத் தமிழ் அரசுக்கட்சியினருக்குத் திட்டவட்டமாக அறிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை 5 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இரா.சமபந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணாக்கியன், த.கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

**இந்தச் சந்திப்பிலேயே ரணில் மாகாண சபைகளுக்கான இடைக்கால நிர்வாகம் குறித்துக் கருத்துத்தெரிவித்தார். கடந்த முறை வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சந்தித்தபோதும் அவர் இதே இடைக்கால நிர்வாகம் தொடர்பில் பேச்சைத் தொடக்கியிருந்தார். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அதற்கான முன்மொழிவுகளை - வரைவுத் திட்டம் ஒன்றை - அப்போது முன்வைத்திருந்தார். ரணில் விக்கிரமசிங்கவும் அதனை ஆமோதித்திருந்தார். ஆனால், தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய** ☞2

## ஜெவர்த்தனபுரவில் தொடங்கியது விரைவில் நாடு முழுவதும் பரவும்

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

ஜெவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தொடங்கியுள்ள போராட்டம் நாடுமுழுவதும் பரவும் என்று அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் ☞2

## கஜேந்திரகுமாரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கச் சதியா?

### நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் எம்பி கேள்வி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சிங்கள மக்கள் மத்தியில் வன்முறையாளராகச் சித்தரித்து அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப்படுகின்றதா என்று முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்..

நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது நாடாளுமன்றக் கடமைகளுக்குத் ☞2

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் நேற்றுபதவி விலகினார்

சப்ரகமுவ மாகாணத்தின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவர் தனது இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

டிக்கிரி கொப்பேகடுவவை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ சப்ரகமுவ மாகாணத்தின் ஆளுநராக நியமித்திருந்தார்.

ஏற்கனவே வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாண ஆளுநர்கள் மாற்றப்பட்ட நிலையில் தற்போது நான்காவது ஆளுநர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். ஏனையவ மாகாணங்களிலும் ஆளுநர் மாற்றம் விரைவில் நிகழும் என்று ஜனாதிபதி தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

## உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்து வலியுறுத்தி வீதிக்கு இறங்கியது ஜேவிபி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி தேர்தல்கள் திணைக்களத்திற்கு முன்பாக ஜேவிபி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தற்போதைய ஆட்சிக்கு எதிராக ஜூன் 8 முதல் தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாக ஜேவிபி அறிவித்திருந்தது. அதன் முதல் போராட்டமாக நேற்றைய போராட்டம் இடம்பெற்றது.

'மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதிக்கு மக்களின் கருத்தை நசுக்குவதற்கு இடமளியோம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்து' என்ற தொனிப் பொருளில் பிற்பகல் 3 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் தொடங்கியது. சுமார் 2 மணி நேரம் தொடர்ந்தது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களும் கட்சியின் முன்வரிசை தலைவர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையொட்டி தேசிய தேர்தல்கள் திணைக்களத்தினைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், நீர்த்தாரை வாகனங்கள் உள்ளிட்டனவும் அங்கே தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்தன. ☞2

## எரிபொருள் விநியோகத்தில் நுழைந்தது அமெ. நிறுவனம்

### ரணில் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கைக்குள் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் பெற்றோலியப் பொருள் இறக்குமதி, களஞ்சியம், விநியோகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசு இஆர்.எம். பார்க்ஸ் (RM Parks Inc) நிறுவனத்துடன் நீண்ட கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இது ஒரு அமெரிக்க நிறுவனமாகும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முன்னிலையில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பீ.டீ.யூ.கே.மாபாபத்திரன மற்றும் ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனத்தலைவர் ஜெஸ்டின் டிவிஸ் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டதன் பின்னர் ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனம் ஷெல் நிறுவனத்துடன் இணைந்து 45 நாட்களுக்குள் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்க இந்த ஒப்பந்தத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

கடன் பத்திரங்களைத் திறந்து பட்டியல்களை மீளச் செலுத்துவதற்கு போதியளவான வெளி நாட்டுவருமானத்தை பெற்றுக்கொள்ள ☞2

## கைது விவகாரம் தொடர்பில் அமைச்சர் டிரானுடன் சபையில் கஜேந்திரகுமார், சுமந்திரன் வாக்குவாதம்

மருதங்கேணியில் பொலிஸார் முன்னிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படவில்லை என்றுபொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து நேற்று முன்தினம் காலை கொழும்பில் கைதான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கிளிநொச்சி நீதிவான் ☞2

## நாட்டை ஆளத் தகுதியற்ற ஆட்சியாளர்களை வெளியேற்ற அனைவரும் தயாராகவேண்டும்

### தேர்தலை நடத்த வலியுறுத்தி பேராயர் மல்க்கம் ரஞ்சித் அழைப்பு

உடனடியாக தேர்தலை நடத்தி மக்களுக்கு தமது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்றைய தினம், கட்டானை கொச்சிக்கடை புனித அந்தோனியார் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதியை அநீதியாக மாற்றவும், ஆட்சியைய ☞2

## திடீரெனப் புத்தளத்தில் செத்து வீழ்ந்த காகங்கள்

அண்மையில் புத்தளம் நகரத்தில் நூற்றுக்கணக்கான காகங்கள் திடீரென இறந்து விழுந்தமை குறித்து அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த காகங்கள் திடீரென கீழே விழுந்து இறந்தன என்று பொதுமக்கள் பலர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். கீழே விழுந்த காக்கைகளுக்கு தண்ணீர் பருகக் கொடுக்க தாம் முயன்றபோதும், அந்தப் பறவைகள் வலியால் துடிதுடித்து இறந்தன என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

காக்கைகள் இப்படித் திடீரெனப் பெரும்

## நியதிச்சட்ட ஆலோசனைச் சபைக்கு இரு பெயர்களை பரிந்துரைத்த சி.வி.

### நேற்று பிரதமருடனான சந்திப்பில் தெரிவித்தார்

ந.லோகதயாளன்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உருவாக்கி வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை நிர்வகிக்கும்போது, மாகாண சபைகளால் உருவாக்கப்படவேண்டிய நியதிச் சட்டங்களிற்கான ஆலோசணை சபையில் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் செயலாளர் விக்கினேஸ்வரன் மற்றும் தந்தை செல்வாவின் மருமகளும் அவரது ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலக்கிரம வரிசைப்படியும் அவர் ரணிலுக்கு ஒவ்வொரு விடயத்தையும் எடுத்துச் சொன்னார்.

நீங்கள் அழைத்த போதெல்லாம் நாங்கள் பேச்சுக்குவந்திருக்கின்றோம். ஒன்றிரண்டு ஆண்டல்ல, போர் முடிந்ததில் இருந்த 14 ஆண்டுகளாக நாங்கள் வந்திருக்கின்றோம். பேச்சுக் கானவாய்ப்புக்களைநாங்கள் புறந்தள்ளினோம் என்ற ஒற்றை வார்த்தையை சர்வதேச சமூகம் எங்களை நோக்கி முன்வைக்கக்கூடாது என்பதற்காகத்தான்ஒவ்வொரு தடவையும் நாங்கள் வந்தோம்.

2015இல் இருந்து 4 வருடங்கள் உங்களோடு முழுமையாக இருந்தோம். எவ்வளவோஎதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் உங்களுக்கு மனப்பூர்வமாக ஆதரவளித்தோம்.தமிழ்மக்களுக்கு ஒருதீர்வுகிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான்நாங்கள் அவ்வளவு கஸ்டப்பட்டோம். எப்போது பேச்சுக்கு அழைத்தாலும் ஓடி வந்தோம்.

என்ன பயன்? நாங்கள் இதுவரை பேசியவற்றால், தீர்வுக்காக மேற்கொண்ட முயற்சிகளால் என்ன பயன்? நாங்கள் கேட்டு நீங்கள் இணங்கிய விடயங்கள்கூடநடைமுறைப்படுத்தப் படவில்லை. அரசியல் தீர்வு விடயத்தில் எந்தவொரு முன்னேற்றகரமான நகர்வும் இடம்பெறவில்லை. அப்படியென்றால்பேசுவதால் என்ன பயன்?

நாங்கள் இனிப் பேசத் தயாராக இல்லை. பேச வேண்டிய விடயங்கள் எல்லாம் ஏற்கனவே பேசப் பட்டாயிற்று. நீங்கள் இனிச் செய்யவேண்டிய கருமங்கள் மட்டும்தான் மிஞ்சியிருக்கின்றன. அவற்றை நீங்கள் செய்யவேண்டும். அவற்றைச் செய்யும் வரைக்கும்எங்களைநீங்கள் பேச அழைக்காதீர்கள். அழைத்தாலும் நாங்கள் இனிப் பேச வரமாட்டோம்.

தீர்வு தொடர்பில் சந்திரிகா அமையாரின் காலத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதி இருக்கிறது, மகிந்த ராஜபக்ச காலத்தில் நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக்குழுவின்பரிந்துரைகள் இருக்கின்றன, உங்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைவுஇருக்கின்றது,ஆட்சித் தரப்புக்கும்தமிழ்த்தரப்புக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் போதியளவு விடயங்கள் ஏற்கனவே ஆராயப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைப்பதற்கு இவையெல்லாம் போதும். அவற்றின் அடிப்படையில் ஒருதீர்வைமுன்வையுங்கள், இதுதான் நாங்கள் தமிழ் மக்களுக்குத் தரப்போகும் தீர்வு என்று அறிவியுங்கள். அதன் பின்னர் நாங்கள் பேச வருகின்றோம்.

அதிலில்லாமல் காலத்தை இழுத்தடித்துக்கொண்டு போவதில் எந்தப் பயனும் இல்லை.

இவ்வாறு சம்பந்தர் ஒரு பிடிபிடித்தார். சம்பந்தர் கிழட்டு நரியென்றால் ரணில் பனங்காட்டு நரி இதற்கெல்லாமா அஞ்சுவார்? எந்தச் சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்துவிட்டு மாகாண சபைகளுக்கான இடைக்காலநிர்வாகம்தொடர்பில் சில விடயங்களைப் பேசிவிட்டு, மகாவலி ஜே வலயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதன் அங்கு தெரி வித்ததற்கு, வழக்கம் போல அதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

தள்ளாத வயதில் சம்பந்தர் தம்பிடித்து ஆற்றிய உணர்ச்சிவசப்பட்ட உரைக்கும் எந்த மதிப்பும் ரணில் விக்கிரமசிங்கவால் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதுதான் தமிழரின் அரசியல் கையறு நிலை இன்று.

**இடிமின்னல்**

## 128 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்கரைப் பகுதியில். மறைத்துவைத்திருந்தசமயம் கடற்படையினருக்குக்கிடைத்த தகவலின் அடிப்படையில் மீறகப்பட்டுள்ளது.

இவ்வாறு மீடகப்பட்ட கஞ்சாப் பொதிகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாககடற்படையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் அதனை உடனடியாகவே எதிர்த்திருந்தன.

இந்தச்சந்திப்பில்மாகாண இடைக்கால நிர்வாக சபை தொடர்பிலேயே ரணில் அழுத்தமாகக் குறிப்பிட்டார். அத்தகைய இடைக்கால நிர்வாக சபை வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அமையுமா அல்லது தனித்தனியாக அமையுமா என்று அவர் கேள்வி எழுப்பினர் தமிழ் அரசுக் கட்சியினர். அதற்குத் தெளிவானபதில்எதனையும்வழங்காத ஜனாதிபதி, அது பற்றி தமிழ்க் கட்சிகளுடன் பேசி இணக்கம் காணலாம் என்று தெரிவித்தார்.

அரசியல் தீர்வு மற்றும் காணி விடுவிப்புத் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கக்குழுக்கள்அமைக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு மாதங்களில் அந்தக் குழுக்களின் அறிக்கைகள் கிடைத்துவிடும்என்றும்அவற்றைத் தமிழ்க் கட்சிகளிடம் வழங்கி அவை தொடர்பில் ஆராயலாம் என்றும் இந்தச் சந்திப்பில்ரணில்தெரிவித்தார்.

ஜனாதிபதியின்பேச்சுக்குப் பதிலளித்துப் பேசிய இரா. சம்பந்தன், இப்படிப் பயனற்ற பேச்சுக்களில் தொடர்ந்தும் ஈடுபடுவதில் அர்த்தமில்லை என்றார். பலசுற்றுப்பேச்சுக்கள் நடத்தப்பட்டபோது உடனடிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவில்லை, அரசியல் தீர்வும் காணப்படவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினார். தமிழ் மக்களின் விருப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்று விரைவில் - இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் - முன்வைக்கப்படவேண்டும், அவ்வாறில்லாவிடின்வெளியக சுயநிர்ணய உரிமை அடிப்படையில்தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறும் முயற்சியில் நாங்கள்வெளிப்படையாகவே இறங்குவோம் - என்றார்.

## கஜேந்திர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரானபோது, அதைத் தடுக்கும்வகையில்திட்டமிட்டுச் செயற்பட்ட பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பொலிஸாரின் இந்த சட்ட விரோதமான திட்டமிட்ட செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு சபாநாயகரும் இடமளித்துள்ளார். இதன் மூலம் சபாநாயகரும் தவறிழைத்துள்ளார்.

இதநேரம், பொலிஸ் பேச்சாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தவறிழைத்தார் என்று குறிப்பிட்டு பொய்யானதொரு குற்றச் சாட்டை ஊடகங்கள் ஊடாகப் பரப்பியிருந்தார்.

இதன் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் எமது கட்சியையும், தலைவரையும் தவறான ஒருவதாக, வன்முறையாளராக சித்தரிப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், அவருக்குதென்னிலங்கையில் எதிர்ப்புக்களை அதிகரிக்கச் செய்து அவரது உயிருக்கு ஆபத்துஏற்படுத்தப்படுகின்றதா என்றசந்தேகம்ஏற்பட்டுள்ளது என்றார்.

## எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத காரணத்தினால் கடந்த காலத்தில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்கள் எரிபொருள் இறக்குமதியில்நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தன.

அதனால்நுகர்வோருக்குத் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக மின்சக்தி எரிசக்தி அமைச்சினால்புதியசர்வதேச நிறுவனங்களை எரிபொருள் துறைக்குள் அனுமதிக்கும் மூலோபாயத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் முதல் கட்டமாக அமைச்சரவை அங்கீகாரத்துடன், நாட்டில் செயல்படும் விநியோக முகவர் வலையமைப்புகள் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக எரிபொருள்உற்பத்திசெய்யும் நாடுகளில் நிறுவப்பட்டுள்ள புகழ்பெற்றநிறுவனங்களுக்கு முதலீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டது.

சந்தையில் நுழையும் புதிய வழங்குநர்களுக்கான முக்கிய நிபந்தனைகளில் உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச்செலாவணித் தேவைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாக இருந்தது. அதன்படி இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம்,செயற்படத் தொடங்கி ஆரம்ப ஓராண்டு காலத்தில் வெளிநாட்டுமூலங்கள் ஊடாக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான அவர்களின்ஒப்புதலைப்பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குத் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படும்.

2002ஆம்ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டத்தின் விதிகளுக்கு இணங்கஇ அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழு (CASC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) ஆகியவை முன்மொழிவுகளை ஆய்வு செய்து பேச்சுவார்த்தைகளுக்கு உட்பட்டு பின்வரும்நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க பரிந்துரைத்தன.

அந்தநிறுவனங்களாவன, சினோபெக் பியூவல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் (Sinopec Fuel Oil Lanka (Private) Limited) F5, அம்பாந்தோட்டைமெரிடைம் நிலையம் மிரிஜ்ஜவெல அம்பாந்தோட்டை.

யுனைட்டட் பெற்றோலியம் பிரைவேட் லிமிட்டெட் (United Petroleum Pty Ltd) 600 கிளென்பெரி வீதி.ஹேதோன் விக்டோரியா 3122 அவுஸ்திரேலியா.

ஷெல் பிஎஸ்சி (Shell PLC) உடன் ஒத்துழைப்புடன் ஆர்.எம்.பார்க்ஸ் (RM Parks), 1061 ஹி பிரதான வீதி போர்ட்டர்வில் கலிபோர்னியா 93257 அமெரிக்கா ஆகியனவாகும்.

சினோபெக் ஒயில் லங்கா தனியார் நிறுவனம் மற்றும் அதன் தாய் நிறுவனத்துடன் நாட்டில் சில்லறை எரிபொருள் வர்த்தகத்தில் பிரவேசிப்பதற்கு மே 22 அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக,தேசியமக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட தரப்பினர்கொழும்பின்முக்கிய வீதிகளுக்குள்நுழைவதற்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ்அத்தியட்சகர்நிஹால் தல்துவதெரிவித்திருந்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை வீதி, கொட்டா வீதி, நாவல வீதி ஊடாக சரண வீதி மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு பிரவேசிக்கும் வீதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தடுத்து இந்த உத்தரவு பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

2023 பெப்ரவரி மாதம் நடத்தப்பட்டிருக்கவேண்டிய உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் நிதி இன்மையைக் காரணம் காட்டி ஏப்ரல் மாதத்துக்கு ஒத்தி வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. அதன் பின்னரும் ஆட்சியாளர்கள் நிதிஒதுக்காததன்காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை காலவரையறை இன்றி ஒத்தி வைத்தது.

## கைது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம்மாலைபிணையில் விடுவித்தது.

இந்நிலையில், இது குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று விளக்கமளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், 'நான் ஜூன் 2 அன்று மருதங்கேணியில் இடம்பெற்ற சம்பவம்தொடர்பானகாணொலிகளைப் பார்த்தேன். அதில் பொலிஸார் தமது கடமைகளைச் சரிவரச் செய்துள்ளனர். ஆனால், கஜேந்திரகுமார் பொலிஸாரை அச்சுறுத்தும்வகையில்நடந்துகொண்டதுடன் அவர்களைத் தகாத வார்த்தைகளைக் கொண்டு திட்டியும் உள்ளார். கஜேந்திரகுமார் ஒரு நாடாளுமன்றஉறுப்பினராகநடந்து கொள்ளவில்லைஎன்பதையே இது காட்டுகின்றது' - என்றார்.

குறுக்கிட்டநாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், 'அந்தச் சந்தர்பத்தில் குறித்த இடத்துக்குச்சிவில்உடையில் வந்த இருவர் தம்மைப் பொலிஸார் எனக் கூறினர். அவர்களிடம்நான்அவர்களின் அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்டபோது அதற்கு மறுப்புத் தெரித்து என்னைத் தாக்கினர்' - என்றார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இரண்டு கேள்விகளை அமைச்சரிடம் முன்வைத்தார்.

'சிவில் உடையில் வந்து தம்மைப் பொலிஸார் எனக் கூறிய இருவரும் ஏன் தமது அடையாள அட்டைகளைக் காண்பிக்க மறுத்தனர்?, கஜேந்திரகுமார் தான் நாடாளுமன்றத்துக்குச் செல்லவேண்டும் எனக் கூறியபோதும் அவ்வளவு அவசரமாகப் பொலிஸார் அவரைக் கைது செய்தமைக் குக்காரணம் என்ன?' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் சுமந்திரன் கேட்டார்.

இதற்குப் பொலிஸார் தமது கடமைகளைச் சரிவரச் செய்துள்ளனர் என்றும், பொலிஸார் மீது எந்தத் தவறும் இல்லை என்றும் மட்டும் அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

'அப்படியாயின் பாதுகாப்பு அமைச்சரான (டிரான் அலஸ்) உங்களின் உத்தரவின் பேரிலா என்னைப்பொலிஸார் கைது செய்தனர்?' - என்று கேள்வி எழுப்பினார்.

இந்த வாக்குவாதத்தில் குறுக்கிட்ட சபாநாயகர், இந்தச் சம்பவம் குறித்த பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருவதால் இது குறித்துவிவாதிக்கவேண்டாம் எனக்கேட்டுக்கொண்டதோடு, சம்பவம் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்தும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விட்டுத்தார்.

இந்த வாதப் பிரதிவாதங்களால் நாடாளுமன்றத்தில் சிறிதுநேரம்அமைதியின்மை ஏற்பட்டது. (02)

## நாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வாதிகாரமாக்கவும், சட்டத்தை மாற்றி சமூகத்தை வழிநடத்தவும் தற்போதைய தலைவர்கள் கைகோர்த்துச் செயற்படுகின்றார்கள். அத்த கையவர்களை வெளியேற்றுவதற்கு அனைவரும் தயாராக வேண்டும்.

இவ்வாறான ஆட்சியாளர்கள்நாட்டைஆளத்தகுதியற்றவர்கள். அவர்களை வெளியேற்றுவது அவசியமாகும். தற்போது நாட்டில் மக்களின்விருப்புக்கள்அறியப் படவில்லை. ஆகவே மக்கள் தமது விருப்புக்களை அறிவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். அதற்காக தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டும். அப்போது மக்கள் தமது ஆணையை வெளிப்படுத்துவார்கள் என்றார்

## திடீரெனப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையில் வீழ்ந்து இறந்தமைகுறித்துகால்நடைத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். இந்தகாகங்களின் உடல்கள் சிலவற்றை பேராதனை பல்கலைக்கழக கால்நடைமருத்துவபீடத்திற்கு அனுப்பியுள்ளதாக கால்நடை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

காக்கைகளின் திடீர் இறப்பு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது, இதனால் அவர்கள் முதலில் காவல்துறையினரிடமே முறையிட்டார்கள். பின்னர் கால்நடைத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டு அவர்கள் வந்து விசாரணைகளைத் தொடங்கினர்.

## நியதிச்சட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனின் மனைவியுமான திருமதி சாவித்திரி சந்திரகாந்தன்ஆகியோரையும் இணைந்துக்கொள்ளுமாறு பிரதமரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு கிழக்கு மாகாண சபை முன்னாள் செயலாளர் விக்னேஸ்வரன் சகிதம் நேற்று பிரதமர் டினேஸ் குணவர்த்தனவைச்சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்படிகோரிக்கையினையும் விடுத்துள்ளார்.

இதேநேரம் இவ்வாறு அமைக்கும் குழுவின் ஏனைய உறுப்பினர்களை பிறகட்சிகளுடன்பேசிநீங்கள் தேர்வு செய்யுங்கள் எனவும் கோரியுள்ளார். இச் சந்திப்பு பிரதமரின் அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

மாகாண சபைகளில் இருந்து பெறப்பட்ட, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றை மீண்டும் மாகாணங்களிடம் திருப்பி வழங்குவதற்கும், அதேபோன்று மாகாணங்களிடம் இருந்து திருப்பிப் பெறப்பட்ட அதிகாரங்களைத் திருப்பி வழங்குவதற்கும் பிரதமர் இந்தச் சந்திப்பில் இணக்கம் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

பிரதமருடனான கலந்துரையாடல் திருப்திகரமாக அமைந்தது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பின்தள்ளப்படும் நிலையில் மாகாண அதிகாரங்கள் மத்தியினால் கணிசமாகத் திரும்பப் பெறப்பட்டுவிட்ட நிலையிலும் இடைக்கால நிர்வாகசபை ஒரு சாதகமான உத்தியெனத் தெரிவித்தேன். இந்த இடைக்கால நிர்வாக சபை செயற்படுத்தப்பட்டால் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறுவதை அது முதன்மையான செயற்பாடாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினேன்.

இந்தப் பேச்சுக்களைக் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கத்தில் நடத்துகிறீர்களா என்று பிரதமரிடம் நேரடியாகவே கேட்டேன். எமது பரிந்துரையில் - மாகாண இடைக்கால நிர்வாக வரைபில் - உள்ளவற்றை நிறைவேற்ற முடியுமானால் மட்டும் பேச்சைத் தொடருங்கள், அது முடியாத காரியமென்றால் இப்போது இந்தப் பேச்சுக்களைக் கைவிட்டுவிடலாம் என்றும் அவரிடம் தெரிவித்தேன்.

இந்த யோசனை அருமையானது என்று தெரிவித்த பிரதமர், இடைக் கால நிர்வாகத்தை உருவாக்குவதில் தமது ஆட்சி சாதகமான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது என்று தெரிவித்தார். இது தொடர்பில் விரைவில் மீண்டும் இரு தரப்பினரும் சந்தித்துப் பேசிக் கொள்வது என்றும் முடிவெடுத்திருக்கின்றோம் - என்றார்.




ஆரம்பம்
18.06.2023
ஞாயிறு பி.ப 3. 00
தீபம்
யாழ் நகர்
கலைப்பிரிவு
A/L 2025 Batch
யாழ் மாவட்டத்தில் தனித்துவமான முன்னணி
ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

| | |
|---|---|
| தமிழ் M.K.கரன் | புவியியல் R.கார்த்தீபன் |
| அளவையியல் P.கமல் | வரலாறு K.கலைச்சந்திரன் |
| அரசியல் K.கபில்ஸ்ரன் | பொருளியல் M.லிஜிதன் |
| கிறிஸ்தவ நாகரிகம் J.J.வசந்தன் M.விமல்ராஜ் | ICT N.கஜன் |
| ஊடகம் M.கோணேஸ் | மனைப்பொருளியல் A.வினோஜினி |

ஆரம்பம்
18.06.2023
ஞாயிறு பி.ப 3. 00
வர்த்தகப்பிரிவு
A/L 2025 Batch
இல11, டேவிட் வீதி,
(கலைக்கோட்டம் அருகில்)
யாழ்ப்பாணம்.
0772247781

| | |
|---|---|
| பொருளியில் | ம. லிஜிதன் |
| கணக்கீடு | வி. தழிழ்ஈசன் |
| வணிக்கல்வி | பா. கோபிதன் |

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்"

# திருகோணமலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்!



(ஹீஸ்பர்)

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வட்டுவான் க வித்தியாலயம், திருவள்ளுவர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்விகற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது வெருகல் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றதுடன் இதனை திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளன் என்பவரின் முயற்சியின் பயனாக மறைந்த சுரேஸ் குமாரின் நினைவாக கந்தையா தொண்டு நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சுமார் 47 மாணவ மாணவிகளுக்காக மேற்படி பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கவும் வறுமை நிலை கல்விக்கு தடை இல்லை என்பதை வைத்து கற்றல் உபகரணங்களின் பிரதிபலனாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், மாவட்ட செயலக சமூக சேவை திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று உலக சுற்றுச்சூழல் தினமான திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் மற்றும் தொழில் வாண்மை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌசாதால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிளாஸ்டிக் அற்ற பிராந்தியத்தை உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக பிராந்திய பணிப்பாளர் றிபாஸ் தனது உரையில் தெரிவித்தார்.





மேலும் இந்நிகழ்வில் பிளாஸ்டிக் பாவனை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் மக்களை விழிப்பூட்ட வேண்டிய முறைமை பற்றி வைத்தியர் ஏ.எஸ்.எம். பௌசாதால் விளக்கக்காட்சியுடனான விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்டதுடன் பிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர் அவர்களால் முயற்சியாண்மை தொடர்பில் உரை ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

குறித்த சுற்றுச்சூழல் தினத்தை அனுஷ்டிக்கும் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பிரிவு தலைவர்கள் சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் பங்குபற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# இன நல்லிணக்க நிகழ்வு கிளிநொச்சியில் நடந்தது



இன நல்லிணக்க நிழ்வு ஒன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மொழிகள் கற்றைபீட மண்டபத்தில் இடம்பெற்றது.

அநுராதபுரத்திலிருந்து மேற்படி நிலையத்திற்கு நேற்று காலை ஒரு குழு வினர் விஜயம் மேற்கொண்டனர். அநுராதபுரத்தில் தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கும், கிளிநொச்சயில் சிங்கள மொழி கற்கும் மாணவர்களுக்குமிடையில் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரச பணியில் உள்ள மேற்படி மாணவர்கள் பல்வேறு அரச திணைக்களங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த ஒன்றுகூடல் மூலம் இன நல்லிணக்கம் மற்றும் மொழி, கலாசாரம் ஆகியவற்றை புரிந்து கொள்ள முடிவதா அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நிலையத்திற்கு வருகை தந்திருந்த பௌத்த மத தலைவர்கள் மற்றம் சிங்ள இன மக்களை தமிழ் உத்தியோகத்தர்களான மாணவர் கள் வரவேற்றனர். தமிழர் கலாசார முறைப்படி வரவேற்றப்பட்டதை தொடர்ந்து கும்பம் வைத்தல், கோலமிடுதல், ஆரத்தி உள்ளிட்ட தமிழர் கலாசார முறைகள் இதன்போது தமிழ் கற்கும் சிங்கள உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து மங்கள விளகேற் றப்பட்டதுடன், இரு தரப்பு கலாசார உணவுகளும் கைம்மாற்றப்பட் டமை விசேட அம்சமாம். தொடர்ந்து தமிழ் சிங்கள நிகழ்வுகள் இரு இனத்தவர்களாலும் முன்னெடுக்ப்பட்டது.

தொடர்ந்து தமிழ் கலா சார உணவை சிங்ள உத்தியோகத்தர்களும், சிங்கள கலாசார உணவை தமிழ் உத்தியோகத்தர்களும் பரிமாறிக்கொண்டனர்.

இந்த செயற்திட்டத்தால் அனைத்து இன மத மொழிகளும் சமமாக மதிக்கப்பட்டு நல்லிணக்கத்துடன் இலங்கையில் வாழும் உணர்வு ஏற்பட்டுள்ளதாக பங்குபற்றியவர்கள் தெரிவிக்கின்றனர். (05 - 113)

# அரசியலில் ஓரங்கட்டப்பட்ட அநாதைக் கோமாளிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சாடுகின்றனர்

## கொட்டகலை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் காட்டம்



அரசியலில் ஓரங்கட்டப்பட்டு அநாதைகளாக்கப்பட்டுள்ள ஒரு சில கோமாளிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும், அதன் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானையும் விமர்சித்து அரசியல் பிழைப்பு நடத்திவருகின்றனர் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரிவிற்கான பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கொட்டகலை பிரதேச சபை தவிசாளருமான ராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தேசிய ஊடகங்களில் தமக்கு இடமில்லை, அதாவது ஊடகங்களில் செய்திகள் வெளியாகும் அளவுக்கு தாம் எதையும் செய்யவில்லை, இன்னும் வளர வில்லை என்பதால்தான், சமூகவலைத்தளங்களில் எமது அமைச்சரை விமர்சித்து, அதன் மூலம் 'பப்ளிசிட்டி' தேடிக் கொள்கின்றனர். இதற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அவர்களே போலி முகநூல் கணக்குகளைத் திறந்து கம்பு சுத்திக்கொள்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நீண்ட வரலாறு கொண்ட ஒரு கட்சி. அது சமூகத்துக்காக செய்த சேவைகள் மக்களுக்கு தெரியும். அதனை நாம் பட்டியலிட வேண்டியதில்லை. இந்த குள்ளநரிக்கூட்டம் இன்று அரசியல் செய்வதற்கான உரிமைகூட காங்கிரஸால் தான் கிடைத்தது என்பதை மறந்துவிடக்கூடாது.

எமது பொதுச்செயலாளர் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர். அவர் மலையகத்தில் புதியதொரு அரசியலை எதிர்பார்க்கின்றார். சேறுபூசும் அரசியல் கலாசாரத்தை நிராகரிக்கின்றார். மக்களுக்கு சேவை செய்கின்றாரே தவிர, தெருநாய்களுக்கெல்லாம் பதில்சொல்வதற்கு அவருக்கு நேரம் இல்லை. அவரை விமர்சித்தால்தான் உங்களின் இருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியுமென்றால் அதையும் பெருந்தன்மையுடன் ஏற்கும் அரசியல் பக்குவம் எமது அமைச்சரிடம் உள்ளது.

அமெரிக்க தூதுவரை சந்தித்து ஓரிரண்டு படங்களை எடுத்துக்கொண்டு அவற்றை வைத்து ஆயுள் முழுவதும் அரசியல் நடத்துவதற்கு எதிர்பார்க்கும் இந்த கோமாளிக்கூட்டம், தூதுவரின் விஜயம் குறித்தும் தவறான விம்பத்தை உருவாக்க முற்படுகின்றன.

எமது சமூகத்துக்காக அமெரிக்கா ஊடாக உதவிகளை எப்படி பெறுவது என்பது பற்றியே எமது அமைச்சர் சிந்தித்து வருகின்றார். மாறாக அறிக்கை விடுத்தும், படங்களை காட்டியும் அவர் பிழைப்பு நடத்தவில்லை. - என்றார். (05)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்



(கல்முனை நிருபர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் புவியியற்துறையால் உலக சுற்றாடல்தினம் கலைகலாசார கேட்போர்கூடத்தில் புவியியற்துறைத் தலைவர் கே. நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் அபூபக்கர் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் விஷேட அதிதியாக கலைகலாசார பீடத்தின் பீடாதிபதி எம்.எம்.பாசில் கலந்துகொண்டதோடு துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தலைமையுரையை துறைத்தலைவர் இவ்வருட சுற்றாடல் தின தொணிப்பொருள் தொடர்பாக நிகழ்த்தினார். நிகழ்வில் உரையாற்றிய உபவேந்தர் பிளாஸ்டிக் மாசுபாட்டால் ஏற்படும் சுற்றாடல், சுகாதார, மற்றும் சமூக பிரச்சினைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

நிகழ்வில் பீடாதிபதி சிறப்புரையாற்றியதோடு பேரசிரியர் எம்.ஐ.எம்.கலீலினால் விஷேட விளிப்பணர்வு விரிவுரையும் நடாத்தப்பட்டதுடன், இந்நிகழ்வினை முன்னிட்டு பீடத்தின் வளாகத்தில் மரநடுகையும் மாண வர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (05)

# 39 வருட கால அரச சேவையை பாராட்டிய கௌரவிப்பும், மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை என்ற நூல் வெளியீடும்

(அபு அலா)

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளா (நிர்வாகம்) தேசமாண்ய ஆதம்வாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழாவும், மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.



சம்மாந்துறை சாதனையாளர்கள் வாழ்த்தும் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாபெரும் விழா அதன் தலைவர் எம்.எல்.தாஸிம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவுக்கு விருந்தி னர்களாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர், தென்கிழக்கு பல்ககலைக்கழக உபவேந்தர், மட்டக்களப்பு மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி, மாகாணஅமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என 500 இற்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பூகோள அரசியலைக் கையாளுதல்

பிராந்திய வல்லரசுகள் மற்றும் உலக வல்லரசுகள் ஆகியவற்றை உரிய வகையில் கையாள்வதன் மூலமே – அவற்றுக்கிடையிலானபோட்டித்தன்மையைப்பயன்படுத்திக் கொள்வதன் மூலமே – இலங்கையை வளர்க்க முடியும் என்று கொழும்பின் மூலோபாய வகுப்பாளர்கள் – ஆட்சியை நகர்த்தும் தந்திரசாலிகள் – எப்போதும் கருதி வருகின்றார்கள்.

அதாவது இந்தியா – சீனா – அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகு ஆகிவற்றுக்கிடையில் இருக்கும் அதிகாரப் போட்டியைச் சரிவரக் கையாண்டு இலங்கையை வளர்த்தெடுப்பது என்பது கொழும்பின் நீண்டகால மூலோபாயம் அல்லது இராஜதந்திரம் என்று சொல்லலாம். இந்தச் சமன்பாட்டை பெற்றோலியப் பொருள்கள் விற்பனையிலும் மீண்டும் நிலைநாட்டியிருக்கிறது கொழும்பு.

இலங்கையில் பெற்றோலியப் பொருள்கள், அதாவது பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய், மசகு எண்ணெய் விற்பனை, விநியோகம் மற்றும் இறக்குமதி என்பன அரசின் ஏகபோக உரிமையாக இருந்தன. அதில் முதலில் இந்தியாவுக்கு இடமளிக்கப்பட்டது. இந்தியன் ஐஓசி நிறுவனம் உள்ளூர் பெற்றோலியச் சந்தையில் உள்நுழைந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு அதே சந்தையில் சீனா மற்றும் அமெரிக்காவையும் களமிறக்கிவிட்டு விட்டது இலங்கை.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்.எம்.பார்க்ஸ் பன்னாட்டுத் தனியார் நிறுவனம் இலங்கையின் பெற்றோலியச் சந்தைக்குள் நுழைவதற்கான ஒப்பந்தம் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுக் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் இந்தச் சந்தைக்குள் நுழையும் மூன்றாவது வெளிநாடாக அமெரிக்கா மாறியிருக்கிறது. ஏற்கனவே சீனாவின் சினோபெக் நிறுவனமும் சந்தைக்குள் நுழைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மிக விரைவில் அதன் செயற்பாடுகள் தொடங்கவுள்ளது.

பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய டொலர் இருப்பு இலங்கை அரசின் வசம் இல்லாத காரணத்தால், இந்த இரு நிறுவனங்களும் தமது நிதி வளத்தைப் பயன்படுத்தியே எரிபொருளை இலங்கைக்கு வரவழைக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதற்காகவே மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலிய வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் இந்த நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாக இலங்கை ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

அதில் உண்மை இருக்கின்றபோதும், இலங்கை பூகோள அரசியலை தனது மண்ணில் வெற்றிகரமாகக் கையாண்டு காசுழைக்கும் உத்தியின் ஒரு வடிவமே இத என்பதையும் மறுக்கமுடியாது. இதன் மூலம் இலங்கையில் எந்தவொரு வல்லரசும் மிகை ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதும் சமநிலையைப் பேணுவதும் இலகுவானது, இயல்பானது என்று கொள்கைவகுப்பாளர்கள் கருதுகின்றார்கள்.

திருகோணமலையில் உள்ள பிரிட்டிஷ் கால எண்ணெய்க் குதங்களை ஏற்கனவே இந்தியா குத்தகைக்குக் கேட்டுவரும் நிலையில், இந்த இரு நிறுவனங்களினதும் வருகையுடன் அதன் கேள்வியும் இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். அதேநேரம் இந்த வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி சந்தையில் விலைக்குறைப்புக்கும் வழிவகுக்கக்கூடும் என்கிற கருதுகோளும் உண்டு. ஆனால் கடைசியில் எந்த நாட்டவராக இருந்தாலும் முதலாளிகளின் குறிக்கோள் இலாபம் ஒன்றே என்கிற வகையில் விலைக்குறைப்பு சாத்தியமானதுதானா என்பது கேள்விக்குரியதே.

இருந்தாலும் பூகோள அரசியலை கொழும்பு திறம்படக் கையாளும் திறனே தமிழர்களுக்கு எதிரான போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கும் அதற்கு உதவியது என்கிற உண்மையை மறந்துவிடமுடியாது. பூகோள அரசியலைப் பற்றித் தமிழர்கள் மத்தியில் அதிகம் பேசப்பட்டாலும் அதனைத் திறம்படக் கையாள்பவர்கள் சிங்களவர்களே என்கிற உண்மையை ஏற்றாகவேண்டும்.

# கைத்தொழிலாளரின் கடன் தவணை செலுத்த சட்டரீதியில் நிவாரண காலம் வழங்கவேண்டும்

### ஹக்கீம் வலியுறுத்து



சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டின் மூலம் நாடு பெற்றுக்கொண்ட கடன் தவணைகளை அந்த காலத்தில் வழங்காமல் இருப்பதற்கு நிவாரண காலம் கிடைக்கப்பெற்றது போல் கைத்தொழில்களில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள கடன் தவணைகளை வங்கிகளுக்கு வழங்க நிவாரண காலம் ஒன்றை சட்ட ரீதியில் அமைத்துக்கொடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்டைபெற்ற சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாட்டின் பொருளாதாரம் கொவிட் தொற்று, ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து பாரிய நெருக்கடிக்கு ஆளாகி வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இதனால் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் வீழ்ச்சியடைந்திருப்பது தொடர்பில் பலரும் கருத்து தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக வங்கி கடன் தொடர்பாக, கடன் மீள செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் எதிர்பார்க்கும் நிவாரணம் தொடர்பாகவும் வங்கிகள் அந்த கடனை மீள பெற்றுக்கொள்ள எடுக்கும் நடவடிக்கை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமையால் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டின் மூலம் நாட்டுக்கும் சில நிவாரணம் கிடைத்தது.

ஏனெனில் நாடு பெற்றுக் கொண்ட கடன் தவணைகளை அந்தக் காலத்தில் வழங்காமல் இருப்பதற்கு நிவாரண காலம் கிடைக்கப்பெற்றதால், அந்தக் காலத்தில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை நாங்கள் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதற்காக வங்கிகளுக்கு வழங்கவேண்டிய கடன் தவணையை தொழிற்ச்சாலைகள் சிறுதுகாலத்தில் வழுங்க முடியுமானவகையில் நாங்கள் சட்டரீதியில் அமைத்துக்கொடுக்க வேண்டும்.

அத்துடன் கண்டி மாவட்டத்தின் குண்டசாலை தொகுதியில் பாரம்பரிய கைத்தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் மற்றும் நாடுபூராகவும் இவ்வாறான கைத்தொழில்களில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் நிலை இன்றும் மிகவும் கவலைக்குரிய நிலையிலேயே காணப்படுகிறது.

இவர்களின் உற்பத்திப் பொருள்களை நேரடியாக கொள்வனவு செய்துவந்த லக்சல போன்ற நிறுவனங்கள் தற்போது அதனை நிறுத்தியுள்ளதால், இடைத்தரகர்கள் சிலர் தங்களின் நன்மைக்காக இதனை திருப்பிக்கொண்டிருக்கிறனர்.

அதேநேரம் தங்களிடம் பல வருடங்களாக பெற்றுக் கொண்ட உற்பத்திப் பொருள்களுக்கான பணத்தை லக்சல நிறுவனம் இதுவரை வழங்காமல் இருப்பதாகவும் கைத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பல்வேறு கைத்தொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி, அவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# தொழில் முயற்சியாளர்களை பாதுகாக்க விசேட ஏற்பாடு!

### பெருந்தோட்ட, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கூறுகிறார்



சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையினர் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

தொழில் முயற்சியாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கி பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை என பெருந்தோட்டத்துறை மற்றும் கைத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்புக்குப் பின்னரான காலப்பகுதியில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையினர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

முதற்கட்டமாக நிதி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

வங்கிகளின் ஊடாகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளல், கடனை மீளச் செலுத்துவதற்கு நிவாரண காலத்தை வழங்குதல் ஆகியவற்றை செய்ய அமைச்சின் ஊடாக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தேசிய மட்டத்தில் தொழிற்துறைகளை விரிவுபடுத்த மூலப்பொருள்கள் விநியோக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தியா உட்பட நாடுகளின் ஊடாக கிடைக்கப்பெறும் உதவிகள் ஊடாக அவற்றை வழங்க எதிர்வரும் நாள்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் சந்தை தொடர்பான பிரச்சினைகளின் போது பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கப்பட்டு உற்பத்திப் பொருள்களின் விலைகளும் உயர்வடைந்தன.

இதனால் சந்தையில் அவற்றை விற்பதில் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டது. எனினும் தற்போது நெருக்கடியில் இருந்து சற்று முன்னேற்றமடைந்துள்ளோம்.

பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் சிறந்த திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. பணவீக்கம் கட்டம் கட்டமாகக் குறைவடைகிறது.

இவ்வருடத்துக்குள் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு நிலைப்படுத்த மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது. நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

அதேபோன்று கைத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் மின்சார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் தேவையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். - என்றார்.(05)

# கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழு செயலகத்தினால் தன்ஷல் வழங்கி வைப்பு

(அபு அலா)

பௌர்ணமி தினத்தையொட்டி கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட தன்ஷல் வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சபை முன்றிலில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்கு ழுவின் செயலாளர் மூ.கோபால ரெத்திணம் தலைமையில் இடம்பெற்ற இந்த தன்ஷல் வழங்கி வைக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலக உதவிச் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு தன்ஷல் வழங்கி வைத்தனர்.

(05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# குருந்தூர்மலை வழக்கு விவகாரம்: செப்ரெம்பர் 14 இற்கு ஒத்திவைப்பு

## கொட்டகலை பிரதேசசபை முன்னாள் தவிசாளர் காட்டம்



(விஜயரத்தினம் சரவணன்)

குருத்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன்,கந்தையாசிவநேசன் மற்றும் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக பௌத்ததேரர்களால் தொடரப்பட்ட வழக்கு எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்தவழக்குமுல்லைத் தீவு நீதிவான் நீதிமன்றில் எடுத் துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பில் மேலும்தெரியவருகையில் -

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல் லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், கடந்த 12.06.2022அன்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழுங்கப்பட்டகட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்தவிகாரையின் கலசத் துக்குரிய விசேட பூசைவழி பாடுகளை மேற்கொள் வதற்குமான முயற்சியில் பௌத்த பிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணி மன்றம், தென்னிலங் கையைச் சார்ந்த பெரும் பாண்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகி யோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழுங்கப்பட்டகட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்குஎதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார்ஆலயநிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலானபோராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள்வடமாகாணசபை உறுப்பினர்களானதுரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகஆர்வலர் ஜூட்நிக்சன்உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் மக்க ளாலும், மக்கள் பிரதிநிதிக ளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்தஆர்ப்பாட்டத்தின்மூலம், முல்லைத்தீவு நீதிமன்றால் வழுங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால்கைவிடப் பட்டிருந்தன.

இந்நிலையில் குருந் தூர்மலையில் மேற்கொள் ளப்பட்ட பௌத்த வழிபா டுகளைத் தடுக்கமுற்பட் டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொது மக்களோடும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசாரவிகரன்,கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல் தென்னஆராண்யவிகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் தேரர்க ளால்பொலிஸில்முறைப்பாடு செய்யப்பட்டவர்களை விசா ரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்தி ருந்தனர். இவ்வாறு போலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமை வாக கடந்த 02.09.2022 அன்று முன்னாள் வடமா காணசபைஉறுப்பினர்ளான துரைராசாரவிகரன்,கந்தையா சிவநேசன்,சமூகஆர்வலர்ஜூட் நிக்சன்ஆகியோர்முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த விசாரணைகளைத்தொடர்ந்து பொலிஸாரால் 20.09.2022 அன்றுமுல்லைத்தீவுநீதிவான் நீதிமன்றில் பி/688/2022 என்னும் வழக்கிலக்கத்தில் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில்விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில்வழக்கை ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

அத்தோடு இந்த வழக் குடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர் களான செல்வராசா கஜேந் திரன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோ ரும் அடுத்த தவணை யின்போது மன்றில் முன்னி லையாகவேண்டும் எனவும் நீதிவானால் தெரிவிக்கப் பட்டது.

மேலும் சிரேஷ்ட சட்டத் தரணிகளான கெங்காதரன், பரன்சோதி, சுதர்சன்ஆகியோர் உட்பட நீதிமன்றிற்கு வருகைந்த சட்டந்தரணிகள் அனைவரும் ரவிகரன், சிவநேசன், ஜூட்நிக்சன் ஆகியோருக்கு ஆதராவாக மன்றில் முன்னிலை யாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டம்





(அபு அலா)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த புதன்கி ழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அவை இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில அத்துகோரால மற்றும்கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரச அதிபர், திணைக்கள அதிகாரிகள்மற்றும்உயர்மட்ட அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மாகாண அபிவிருத்திகள்தொடர்பாகவும், பொதுமக்கள்எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (05)

# யானை தாக்கி ஓட்டோ சேதம்!



(எப்.முபாரக்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சீனி புர பகுதியில் காட்டு யானை ஓட்டோஒன்றைத்தாக்கியதில் சேதமடைந்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொசன்பண்டிகைக்காக தனதுமகளைப்பார்ப்பதற்காக கண்டியில் இருந்து சென்ற ஓட்டோ நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை வீட்டில் வைத்து இவ்வாறு காட்டு யானை தாக்கி சேதப்படுத்தியுள்ளதாகப்பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் சீனி புர பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை தொடர்ந்தும்அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்துசம்பந்தப்பட்ட வனஜீவராசி பாதுகாப்பு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கைவிடுக்கின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 25 வியாழக்கிழமை 08.06.2023 கதிர் 80

## மருத்துவரைச் படுகொலைசெய்த புளொட் பொறுப்பாளருக்கு தூக்கு

### வவுனியா மேல் நீதிமன்றம் இன்று தீர்ப்பு

வவுனியாவில் மருத்துவர் முகைதீனைச் சுட்டுக் கொலை செய்த புளொட் அமைப்பைச் சேர்ந்த ஒருவருக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

2009 ஏப்ரல் 20 மருத்துவர் முகைதீன் சுட்டுக் கொல்லப்பட்டார். கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையில் இருந்த சமயம் அவர் கொல்லப் பட்டார்.

2

# எனது கைது சட்டவிரோதம் உரிய நடவடிக்கை தேவை

### சபாநாயகரிடம் கொந்தளித்தார் கஜேந்திரகுமார் எம்.பி.

தான் சட்டரீதியற்ற வகையில் கைது செய்யப் பட்டதன் மூலம் தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று சிறப்புரிமை ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய நிலையில் அவர் அறிக்கை ஒன்றை முன்வைத்தார்.

அதில் மருதங்கேணியில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து அவர் விளக்கமளித்தார்.

அத்துடன்தான் சபாநாயகரைத் தொடர்பு கொண்ட போதும், அவரின் தொடர்பு கிடைக்காமையால், பிரதி சபாநாயகருடன் தொடர்பு கொண்டு, நாடாளுமன்றில் சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பிய பின்னர், மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் 12ஆம் திகதியன்று வாக்குமூலம் வழங்க உடன்பட்டதாக கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.

எனினும், இதனைப் புறக்கணிக்கும் வகையில் தன்னை நேற்று காலை மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள், கொழும்பில் உள்ள வீட்டில் வைத்து கைது செய்தனர் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

2



## கொழும்பு முத்தேர் பவனி திருவிழாவில் சஜித்!



கொழும்பு 13, கதிரேசன் வீதி-ஷ்ரீகதிர்வேலாயுதசுவாமி திருக்கோயில் இரதோற்சவ முத்தேர் பவனி திருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று காலை கலந்து கொண்டார்.

விசேட அபிஷேக அலங்காரப் பூஜைகளைத் தொடர்ந்து மங்கள வாத்தியம் முழங்க, பக்தர்களின் அரோகராகோஷத்துடன் 2

## காங்கேசன்துறையில் நான்கு பேர் கைது!

### வாள்செய்த குற்றத்தில்

காங்கேசன்துறையில் வாள் செய்து கொண்டிருந்த நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். மாவட்டம், காங்கேசன்துறைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில்வீடொன்றில் வாள் செய்யப்பட்டுக் கொண்டிருப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

தகவல்கிடைத்ததும் 2

## யாழ்ப்பாணத்தில் நேற்று மட்டும் 15 பேர் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளுடன்தொடர்புடைய 15 பேர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின்வழிகாட்டுதலுக்கு அமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடுவோர் மற்றும்போதைப்பொருளுக்கு அடிமையானோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றைய தினம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு, கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த 20 தொடக்கம் 30வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தின் முற்படுத்தப்பட வுள்ளனர்.

## நகைச்சுவையாளர் நடாஷா கைது; 5 ஊடகவியலாளரும் கைதாகலாம்

நகைச்சுவைப்பேச்சாளர் நடாா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த மேலும் ஐவரைக் கைது செய்வதற்கான முன்ஏற்பாடுகளில்பொலிஸார் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நடாாவின் கைது தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த இந்த ஐவர் மீதும் நீதிமன்றத்தை அவமதித்தனர் என்று குற்றம் சுமத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடவரகெதர, சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர, சமூக ஆர்வலர்களான விதர் ஷன கன்னங்கர, பித்ரோ பெர்னாண்டோ ஆகியோர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

பௌத்த மதத்தை அவமதித்தனர் எனக் கூறப்படும் நடாா எதிரிசூரியவுக்கு எதிரான வழக்கு நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த ஐவர் மீதும் பொலிஸாரால் இந்தக் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

நடாா எத்ரிசூரிய கைது செய்யப்பட்டதன் பின்னர் இவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பு நீதிமன்றத்தை அவமதிக்கும் 2

## போதைக்கு அடிமையான பூசகர் ஊசி ஏற்றிய நிலையில் இறப்பு

### நாயன்மார்கட்டில் இன்று பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜுன் 08 (ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் பாவனைக்கு அடிமையான பூசகர் ஒருவர் அரைவாசிப் போதை ஊசி ஏற்றிய நிலையில் இன்று காலை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டுப்பகுதியில் வசிக்கும் 26 வயது பூசகர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரது வீட்டுக்கு அருகில் உள்ள ஆட்களற்ற வீட்டில் அவரது சடலம் இன்று காலை கண்டுபிடிக்கப்பட்டது. அவரது கையில் போதை ஊசி அரைவாசி ஏற்றப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர்கள் சடலத்தை அப்படியே மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். உடற்கூறாய்வுகளின் பின்னர் சடலம் உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

## டயனாவை கமகேவை விரட்டியடித்துவிட்டோம்

### அவர் சொல்வது பச்சைப் பொய் என்று சஜித் கட்சியினர் அறிவிப்பு



தான் இன்னமும் ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளராக இருப்பதாக டயனா கமகே எம்.பி. கூறியுள்ளார். இது முற்றிலும் தவறான தகவலாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலார் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் பதவியில் இருந்து டயனா கமகே நீக்கப்பட்டுள்ளார். அதற்கான கடிதம் உள்ளது. நாம் போலி ஆவணத்தைச் சமர்ப்பிக்கவில்லை. இந்தவிடயம்தொடர்பில் சி.ஐ.டி.யினர் விசாரணை நடத்தலாம்.

எனவே, போலித் தகவல்களை வெளியிட வேண்டாம் என டயனா கமகேவிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஐக் கிய மக்கள் சக்தியின் புண்ணியத்தால்தான் அவர் நாடாளுமன்றம்வந்தார். -என்றார். (02)

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் இராஜிநாமா

### ஜனாதிபதிக்குக் கடிதம்



சப்ரகமுவமாகாணஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தனது இராஜிநாமாக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2023 ஜுன் 10 ஆம் திகதி முதல் தனது பதவியை இராஜிநாமா செய்வதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2019 செப்டெம்பர் 18 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, சப்ரகமுவ மாகாண ஆளுநராக டிக்கிரி கொப்பேகடுவவை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

குறித்தமாகாணங்களின் முந்தைய ஆளுநர்களை ஜனாதிபதிபதவிவிலக்கியதன் பின்னர் இந்தநியமனம் இடம்பெற்றது. (02)

## பரீட்சை நிலையத்தில் மயக்கமுற்று விழுந்த ஆசிரியை மரணம்

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சையின் கண்காணிப்பாளராகக்கடமையாற்றியபாடசாலை ஆசிரியை ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வத்தேகம மகளிர் பாடசாலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவர் பரீட்சை ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னர் திடீரென மயக்கமுற்று விழுந்துள்ளார். உடனே அவர் வத்தேகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் கட்டுகஸ் தோட்டை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியையே (வயது 48) உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக ஆசிரியை உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம்பெறுகின்றது. (02)

## பிரிவினைவாத சக்திகளின் கைக்கூலியே சாணக்கியன்

### சபையில் வைத்து அலி சப்ரி பதிலடி





வெளிநாட்டுப் பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் செயற்படுகின்றார் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில்இன்று சிறப்புரிமை பிரச்சினையெ-ான்றை எழுப்பிய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுப் பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகச் செயற்படும் ஒருவர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார். அவர்தான் இராசமாணிக்கம்சாணக்கியன். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விருப்பம் அற்றவர்தான் அவர். இனப்பிரச்சினை நீடித்தால்தான் தம்மால் அரசியல் செய்ய முடியும் என அவர் கருதுகின்றார். 2

## கோட்டாவுக்கு இல்லம் மட்டுமல்ல ஆடையையும் கழற்றிக் கொடுப்பார் வெளிவிவகார அமைச்சர்

### சாணக்கியன் கிண்டல்



பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய கோட்டாபய ராஜபக் வுக்கு மலலசேகர மாவத்தை பகுதியில் அதிக சத்தம் என்பதால் வெளிவிவகாரத்துறைஅமைச்சருக்கு வழங்கப்பட்ட இல்லம் வழங்கப்பட்டுள்ளது. வெளிவிவகாரத்துறைஅமைச்சர் கோட்டாபய ராஜபக்வுக்கு இணக்கமானவர் என்பதால் இல்லத்தையல்ல, ஆடையையும் கழற்றிக் கொடுப்பார்.

இவ்வாறுதமிழ்த் தேசிய கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட இலங்கையின் கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் நேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார ரீதியில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களுக்கு அதை செய்வோம், இதைச் செய்வோம் என ஆட்சிய-ாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு கடந்த ஆட்சி மற்றும் அமைச்சரவை பொறுப்புக்கூற வேண்டும் என்பதை மறந்துவிட்டார்கள்.

வங்கிக் கடன் வட்டி வீதத்தால்சிறு மற்றும்நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வங்கி வட்டி வீதம் 25 முதல் 35, 40 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

பொருளாதாரப்பாதிப்பை ஏற்படுத்தியமுன்னாள்ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவுக்கு மலலசேகர மாவத்தையில் வழங்கப்பட்ட இல்லத்துக்கு பதிலாகவெளிவிவகாரத்துறை அமைச்சருக்கு வழங்கப் பட்ட அரச இல்லம் 2

## எனது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் கைது செய்யப்படுவதற்கு முன்னர் சபாநாயகரைத் தொடர்பு கொண்டுநிலைமையைவிளக்கியதாகவும், இதன்போது, கைதுக்கான நீதிமன்ற உத்தரவு சமர்ப்பிக்கப்படாவிட்டால், நாடாளுமன்றத்துக்கு வந்து சிறப்புரிமை பிரச்சினையை எழுப்புவதைப் பொலிஸார் தடுக்க முடியாது என சபாநாயகர் உறுதியளித்திருந்தார் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. கூறினார்.

எனினும், அதனையும் மீறி பொலிஸாரின் உயர்மட்ட கட்டளையின்படி தான் கைது செய்யப்பட்டதாகவும் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.

எனவே, தனது கைது சட்டவிரோதமானது என்றும், இது தொடர்பில் சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இந்தநிலையில்கஜேந்திரகுமாரின் அறிக்கைக்குத் தான்பதில்வழங்கப்போவதில்லை என்றும், இந்த விடயம் நாடாளுமன்றச் சிறப்புரிமை குழுவுக்கு அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உறுதியளித்தார். (02)

## நகைச்சுவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாகும் என 'சிஹல ராவய' என்ற அமைப்பின் அழைப்பாளர் பிரபாத் மதுபாசன சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பின் புகைப்படங்களை முன்வைத்த சட்டத்தரணி, நடாா எத்ரிசூரியவை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறு செய்தியாளர்கள் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுதிணைக்களத்தில் (சிஐடி) முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போலும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கோட்டை நீதிவான் திலின, குற்றம் சுமத்தப்பட்ட ஐவரின் வாக்குமூலங்களையும் பதிவு செய்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளார்.

## கோட்டாவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

மலலசேகர மாவத்தையில் அதிக சத்தம் என்பதால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிவிவகாரத்துறை அமைச்சரின் இல்லம் வழங்கப்பட்டுள்ளது. வெளிவிவகாரத்துறை அமைச்சர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இணக்கமானவர் என்பதால் அவர் இல்லத்தை அல்ல, ஆடையைக் கூடக் கழற்றிக் கொடுப்பார்.

கடந்த அரசாங்கத்தின் தலைவர் மீது ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல்குற்றச்சாட்டு, கொவிட் பெருந்தொற்று தாக்கத்தை முறையாகக் கட்டுப்படுத்தாத குற்றச்சாட்டு என பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்குஎதிராக எந்தநடவடிக்கையும்இதுவரை எடுக்கப்படவில்லை.– என்றார். (05)

## பிரிவினைவாத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் தீர்வைக் காணும் எமது முயற்சிக்கு அவரால் எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

நாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை காண முற்பட்டால் அதனைக் குழப்புமாறு வெளிநாட்டு பிரிவினைவாத சக்திகள் அவருக்கு ஆலோசனை வழங்குக்கின்றன. அந்த ஆலோசனையின் பிரகாரம்தான் அவர் கொக்கரிக்கின்றார். நேற்றும் இந்தச் சபையில் அவர் கொக்கரித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு நான் அரச வீடொன்றை வழங்கியுள்ளதாக அவர் கூறுகின்றார். அது பொய். அவ்வாறு என்னால் வீடு வழங்க முடியாது. நான் அரச வீட்டில் வசிப்பதும் இல்லை. சொந்த வீட்டில்தான் வாழ்கின்றேன். எனவே, சிறப்புரிமையைப் பயன்படுத்திக்கொண்டு சில்லறைத்தனமான கருத்துக்களை வெளியிட முற்படக்கூடாது – என்றார். (02)

## கொழும்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர் ஆரம்பமாகியது. நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் இந்தத் திருவிழாவில் கலந்து கொண்டனர். (02)

## காங்கேசன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வீட்டினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். வாள்செய்துகொண்டிருந்தார்கள் என்றசந்தேகத்தில்அங்கிருந்த நால்வரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மருத்துவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக்கொலைதொடர்பில் புளொட் அமைப்பின் வேப்பங்குளம் முகாம் பொறுப்பாளரான நெடு மாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்பவரைக்கைதுசெய்தனர். சந்தேகநபரான அவருக்கு எதிராகசட்டமாஅதிபர்திணைக்களம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

கடந்த 14 வருடங்களாக இடம் பெற்றுவந்த இந்த விசாரணையின் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டது. சந்தேகநபரின் துப்பாக்கியிலிருந்து வந்த தோட்டாக்களே மருத்துவரின் உயிரைப்பறித்தனஎன்றசட்டமா அதிபர்திணைக்களத்தின்வாதம் ஆதாரங்களுடன் நிரூபிக்கப் பட்டிருப்பதாக மன்று திருப்தியடைவதால் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப் படுகின்றது என்று நீதிபதி ம.இளஞ்செழியன்அறிவித்தார்.

வழக்கு விசாரணைக் காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நெடுமாறன் வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து இன்று கைது செய்யப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டார். (100)

# சிறு ஏற்றுமதியாளர்கள் உற்பத்தியாளர்களை திரட்டி பொருளாதார மீட்சிக்கான தீர்வை உடன் காணுங்கள்

## ரிஷாட் எம்.பி நாடாளுமன்றத்தில் வலியுறுத்து



சிறு ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்றவர்களை ஒன்றுகூட்டி, கலந்தாலோசனை செய்து, பிரச்சினைகளைஇனங்கண்டு பொருளாதார வீழ்ச்சிக்கான அடிப்படை பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு என்று முன்னாள் கைத்தொழில், வர்த்தக அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷநாட்டைப் பொறுப்பேற்றதிலிருந்து நாடு மிக மோசமான நிலைக் குத் தள்ளப்பட்டதோடு, பொருளாதார அழிவையும் சந்தித்தது. தொழில்கள் இல்லாமலாக்கப்பட்டன. கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஒட்டுமொத்தத்தில் நாட்டையேஅதலபாதாளத்தில் தள்ளியஜனாதிபதியாகஅவரை நாங்கள் நோக்குகின்றோம்.

தற்போதைய கைத்தொழில் அமைச்சர் திறமையானவர், அறிவார்ந்தவர், முற்போக்குச் சிந்தனை கொண்டவர். அவரின் மீது நான்நல்லெண்ணம்கொண்டிருக்கின்றேன். அவரை சந்திக்கும்போதெல்லாம் கைத்தொழில்துறைவளர்ச்சிதொடர்பான எனது ஆலோசனைகளை தெரிவிப்பது வழக்கம்.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர், சுமார் 20 சதவீதமான சிறு ஏற்றுமதியாளர்கள், சிறு கைத்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்தத் துறையில் ஈடுபட்டவர்கள் பல இன்னல்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கினர். தற்போதும் எதிர்நோக்கி வருகின்றனர். ஆட்சியாளர்கள் செய்யும் தவறுக்காக அவர்கள் அனுபவிக்கின்றனர்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பல்வேறு தவறுகளை செய்தார் எனக் கூறுகின்றனர். எனினும், அப்போது அவரை அமைச்சராக்கி, பின்னர் ஆளுநராக்கி, அமைச்சரவை அந்தஸ்தையும் அவருக்கு பெற்றுக் கொடுத்தனர். இவ்வாறு அழகுபார்க்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் 3 ட்ரில்லியன் நாணயத்தாள்களை அச்சிட்டார். நாங்கள் இதனை எதிர்த்துக்குரல்கொடுத்தபோது "துறைசார்ந்தவர்கள் அதனைச்சரியாகசெய்கின்றார்கள். நீங்கள் பின்னர் இதைப்பற்றி அறிந்துகொள்வீர்கள்'' என்று அவர்கள் கூறினர். கப்ரால் நாட்டை நாசமாக்கி, முதலீட்டாளர்களை நாட்டுக்கு வரவழைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தினார்.

அந்தக் குறுகியகாலத்தில் நாடு பொருளாதார சீரழிவுக்குள்ளாகி இனவாதம் தலைவிரித்தாடியது. மத்திய கிழக்கு முதலீட்டாளர்களை இனவாதக் கண்ணோட்டத்தோடு பார்த்தனர். ஊடகங்கள் வாயிலாக இனவாத செயற்பாடுகளை பரப்பினர். நாடு குட்டிச் சுவராகியது. எதிர்காலத்தில் இதனை சீரமைக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கும் ஆட்சியாளருக்கும் உள்ளது.

புதிய ஜனாதிபதி 2048 தொடர்பில் இப்போது கனவு காண்கின்றார். ஆனால், தற்போது தொழிற்சாலைகள் இங்கு மூடப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்கு நிவாரணம் காண்பதை விடுத்து, நீண்டகாலத்துக்குப் பின்னர் நாம் அதனை அடைந்துவிடுவோம் எனப் பேசுவது வியப்பாக உள்ளது. அது மாத்திரமின்றி இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்குப் பேரழிவையே ஏற்படுத்தும்.

தற்போது, பெரும் ஆடைத்தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதலீட்டாளர்கள் பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் இன்னோரன்ன நாடுகளுக்கு படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அவர்களை தொடர்ந்தும் இந்த நாட்டில் தொழில்களைசெய்வதற்கான ஆலோசனைகளை வழங்கி, அதற்கான சூழலையும் மனோவலிமையையும் ஏற்படுத்தி உத்தரவாதத்தை வழங்குங்கள். தற்போது, இயங்கிக்கொண்டிருக்கின்ற கைத்தொழிற் சாலைகளையாவது தொடர்ந்தும் இயங்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.

உதாரணமாக, புத்தளத்தில் குறிப்பாக, மதுரங்குளியில் 170 தும்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. சுமார் 510 வாகனங்கள் இந்தத் துறைக்காக சேவையில் ஈடுபடுகின்றன. 1360 பேர் இந்தத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். மறைமுகமாக இந்தத் தொழிலுடன் தொடர்புபட்ட 3500 பேர் இருக்கின்றனர். தும்பு மற்றும் தும்புச் சோறு ஆகியன சுமார் 2 மில்லியன் பொலர்வரையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு பிரமாண்டமான தும்புத் தொழிலில் ஈடுபாடு காட்டுபவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. தும்புக்கான சரியான விலை நிர்ணயிக்கப்படவில்லை. சவூதி அரேபியாகூட பல மில்லியன் ரூபா பெறுமதியான தும்பைக் கோரி நிற்பதாக பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது. ஆனால், உற்பத்தியாளர்கள் இதனை ஏற்றுமதி செய்ய முடியாது திண்டாடுகின்றனர். எனவே, இந்த விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன் மருதமுனை, பாலமுனை, குருநாகல் போன்ற இடங்களில் நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருக்கின்றன. வியாபார மாபியாக்கள் இதற்குத் தடையாக உள்ளனர். எனவே, இந்த விடயத்திலும் கூடிய கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் உரையாற்ற வருகை தரவிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் திடீர் கைது தொடர்பிலும், அவரது சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பிலும் எனது கண்டனத்தை தெரிவிக்கின்றேன் – என்று கூறினார்.

# கஜேந்திரகுமாரின் கைதுக்கு பிரித்தானிய எம்.பி கண்டனம்



தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுசெய்யப்பட்டுள்ளமையை பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்போர்ன்கண்டித்துள்ளார்.

தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் கஜேந்திரகுமார் கைதுசெய்யப்பட்டதை நான்கண்டிப்பதுடன் அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள்விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய அட்டூழியங்கள் இனப்படுகொலைகளிற்கான நீதி மற்றும் இனப்பிரச்சினைக்கானதீர்வுதொடர்பாகக் குரல்கொடுக்கும் தமி;ழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை இந்தக் கைது அச்சம் தரும்விதத்தில் வெளிப்படுத்தியுள்ளது என அவர்குறிப்பிட்டுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டுள்ளமை தொழில்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர் சியோபன் மெக்டொனாக்கும் கண்டித்துள்ளார்.




# கல்மெட்டியாவவில் மரநடுகை





(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி மரநடுகை மற்றும் சிரமதான நிகழ்வு இன்று இடம்பெற்றது.

கல்மெட்டியாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இடம் பெற்ற குறித்த நிகழ்வில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன. மரநடுகை மூலமாக சுற்றாடலை பாதுகாக்கும் நோக்கில் இது நாடு முழுவதும் இடம்பெற்று வரும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மரநடுகை இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இயற்கை வளச் சுரண்டலை நிறுத்த வலியுறுத்தி பேரணி

## வாகரையில் இன்று இடம்பெற்றது

எப்.முபாரக்

வாகரை பிரதேசத்தில் இடம்பெறும் இயற்கை வள சுரண்டல்களை நிறுத்தக்கோரிய கண்டனப் பேரணி இன்று வாகரையில் இடம்பெற்றது. சர்வதேச சுற்றாடல்தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் வாக ரைப் பிரதேசத்தில் நீண்டகாலமாக அரச மற்றும் தனியார் அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலியல்நீதியைப்பாதிக்கும் வகையிலான இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணை திட்டங்களை முற்றாக தடை செய்யுமாறு வலியுறுத்தி இந்தப் பேரணி இடம்பெற்றது.





சூழலியல் நீதிக்கான மக்கள்கூடல்(PCCJ)அமைப்பின் அனுசரணையுடன் வாகரை பிரதேசிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணியானது, கண் டலடி தொடக்கம் வாகரை பிரதேச செயலகம்வரை இடம்பெற்றது.

வாகரை வாழ் மக்களால் இயற்கை வளங்களைப் பாதிக்கும் வகையிலான அனைத்துத்திட்டங்களையும் முற்றாக நிறுத்தக்கோரிய மனு ஒன்றும் பிரதேசசெயலகத்தில் கையளிக்கப்பட்டது.

இப்பேரணியில் வாகரைப் பிரதேசத்தின் விவசாய மீனவ அமைப்புக்கள், இளைஞர்கள், பெண்கள்செயற்பாட்டாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

# 17 பரல் கோடாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,சுடலைக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 17 பரல் கோடாவைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய் துள்ளனர்.





இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுடலைக் குளம் பகுதியில் இரா மநாதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து அந்த இடத்தை நேற்றிரவு சுற்றி வளைத்த பொலிஸார் கசிப்பு உற்பத்தி செய்வதற்காகத் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்த 17 பரல் கோடாவைக் கைப்பற்றினர். அதில் சுமார் 3,780 லீற்றர் கோடா காணப்பட்டது. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப் பட்டார். சந்தேகநபரை நாளை நீதிமன்றில் முற்படுத் தப்பட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பண்டார தெரிவித்தார். (113)

# வயோதிப பெண்ணின் கழுத்தில் சுருக்கிட்டு துன்னாலையில் நகைகள் கொள்ளையடிப்பு

வயலில் கட்டப்பட்டு இருந்த மாட்டை அவிழ்க்க சென்றவயோதிபபெண்ணின் கழுத்தில் சுருக்கிட்டு அவரது தங்க நகைகள் கொள் ளையடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்துன்னாலை பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்தசம்பவம் தொடர்பில் தெரியவருவ தாவது -

வயலில் கட்டப்பட்டி ருந்த மாட்டை அவிழ்க்க சென்ற பெண்ணை பின் தொடர்ந்து சென்ற கொள்ளையன் , வயலுக்கு அருகில்வயோதிபபெண்ணின் கழுத்தில் சுருக்கு கயிறை மாட்டி இழுத்துள்ளார்.

அதனால்வயோதிபபெண் மயக்கமுற்றவுடன் , அவரது நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளான்.

மயக்கம் தெளிந்து வயோதிபப் பெண் எழுந்த போதே தனது நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. அதனை அடுத்து அது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (05)

# பரீட்சை மண்டபத்துக்குள் ஓடியவர் யார்? கஜேந்திரகுமாரா, புலனாய்வுத் தரப்பினரா?

## சிறிதரன் சபையில் காட்டத்துடன் கேள்வி

பரீட்சைமண்டபத்துக்கு ஓடியவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமா? அல்லது புலனாய்வு தரப்பினர் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களா? முறையான விசாரணை செய்யாமல் சபையில் பொய்யான விடயங்களைக் குறிப்பிட்டு நாட்டு மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஆளும் தரப்பை நோக்கிக் கடுமையாகச் சாடினார்.

கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்க ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பிய, எஸ்.சிறிதரன் ஒழுங் குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி அமைச்சர் மஹிந்த அமரவீர , கஜேந்திரகுமார் பொலிஸாரைத் தாக்கினார் என அப்பட்டமான பொய் ஒன்றைக்கூறினார். கஜேந்திரகுமார் பொலிஸாரைத் தாக்கினாரா அல்லது பொலிஸார் கஜேந்திரகுமாரை தாக்கினார்களா? என்பதை முதலில் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கஜேந்திரகுமாரை தாக்கிய பொலிஸாரை முதலில் கைது செய்யுங்கள், அவர்களிடம் விசாரணை நடத்துங்கள். கஜேந்திர குமரை தாக்கிவிட்டு அருகில் இருந்த பாடசாலை பரீட்சை மண்டபத்துக் குள் ஓடிச் சென்று ஒளிந்து



கொண்டவர்கள் பொலிஸார் தான் எனக்கூறினார். இதனையடுத்து சபையில் அரச தரப்பினர் "புலி"புலி" எனக்கூச்சலிட்டனர். பதிலுக்கு சாணக்கியன். சிறிதரன் ஆகியோரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். (05)

# 5 மாதங்களில் 41,581 டெங்கு நோயாளர்கள்

## 25 இறப்புகளும் பதிவு

நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 41 ஆயிரத்து 581 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளமையோடு, 25 மரணங்களும் பதிவாகியுள்ளன.



மழைக் காலநிலையுடன் இந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக் கூடும். எனவே, சகலரும் தமது சுற்றுச்சூழலை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் நிமல்கா பன்னிலஹெட்டி தெரிவித்தார்.

அத்தோடு 11 மாவட்டங்களிலுள்ள 67 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதியுயர் அபாய வலயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன எனவும், அந்த பகுதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

41 ஆயிரத்து 581 டெங்கு நோயாளர்கள் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ளனர். வாராந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது. இவர்களில் 49 சதவீத மானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கண்டி, நுவரெலியா, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் மாத்திரமே கனிசமானளவு டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றனர். ஆனால் மேல் மாகாணம் முழுவதிலும் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில் மாத்திரம் 25 பேர் டெங்கு நோயால் பாதிக்கப் பட்டு உயிரிழந்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்த 22 ஆவது வாரத்தில் கொழும்பில் மாத்திரம் 507 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதே வேளை களுத்துறையில் 193, கம்பஹாவில் 519 என டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளை விட இவ்வாண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்கமைய 67 சுகாதார மருத்துவ பிரிவுகள் அதிக அபாயம் மிக்க மாவட்டங்களாகப் பதிவாகியுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, பொலன்னறுவை, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலேயே குறித்த அதி அபாய வலயங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

2017 இல் ஒரு லட்சத்து 86 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அதன் பின்னர் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படும் வீதம் குறைவாகக் காணப்பட்டாலும் , இவ்வாண்டில் மீண்டும் சடுதியான அதிகரிப்பு காணப்படுகிறது. மழைக்காலநிலை ஆரம்பித்த பின்னர் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது. எனவே அதற்கு இடமளிக்காத வகையில் அனைவரும் தமது சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். - என்றார்.

# வன் கோல்பேஸ் கட்டடத் தொகுதியில் கலகம் விளைவித்த கலால் திணைக்கள அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை!

கொழும்பில் உள்ள வன் கோல்பேஸ் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் கைகலப்பில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் கலால் திணைக் கள அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக கலால் திணைக் களம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கலால் திணைக் களத்தின் பேச்சாளரும் மேலதிக ஆணையாளருமான கபில குமாரசிங்க இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இந்த விவகாரம் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு, அசாதாரண நிலைமை ஏற்பட காரணமானவர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனையடுத்து அவர்களை பணி இடைநிறுத்தம் செய்யவோ அல்லது அவர்களுக்கு வேறு தகுந்த தண்டனை வழங்கவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

15 பேர் கொண்ட இந்த அதிகாரிகள் குழு கலால் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், சம்பவத்தின் போது அவர்கள் மதுபோதையில் இருந்தனர் எனவும் அவர் மேலும் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (05)

# லங்கா பிரிமியர் லீக் தொடருக்கு முழுமையான ஆதரவு லைக்கா நிறுவன ஸ்தாபகர் சுபாஸ்கரன் உறுதியளிப்பு

லைக்கா நிறுவனத்தின் ஸ்தாபகர் அல்லிராஜா சுபாஸ்கரனை லங்கா பிரிமியர் லீக்கினை ஒழுங்கமைக்கும் ஐபிஜி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அனில் மோகன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது, இந்த ஆண்டுக்கான லங்கா பிரிமியர் லீக் தொடருக்கான தனது முழுமையான ஆதரவை அல்லிராஜா சுபாஸ்கரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

அல்லிராஜா சுபாஸ்கரன், கிரிக்கெட் மற்றும் லங்கா பிரீமியர் லீக்கிற்கு நிபந்தனையற்ற ஆதரவாளராக இருந்துள்ளார் என்றும் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பும், மகத்தான ஆதரவும் லங்கா பிரீமியர் லீக்கின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் முக்கியப் பங்காற்றியுள்ளதாகவும் அனில் மோகன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் கிரிக்கெட்டை ஊக்குவிப்பதில் அவரது பங்களிப்புகள் மற்றும் அர்ப்பணிப்புக்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் அனில்மோகன் பாராட்டியுள்ளார்.



ஐரோப்பா, தென்னிந்தியா என உலகளவில் வலுவான நிலையில் உள்ள லைக்கா நிறுவனம் கடந்த 2021 ஆம் ஆண்டு லங்கா பிரீமியர் லீக்கின் யாழ்ப்பாண அணிக்கான உரிமையை வாங்கியதில் இருந்து, லங்கா பிரிமியர் லீக் தொடரில் முக்கிய பங்குதாரராக அல்லிராஜா சுபாஸ்கரன் இருந்து வருகிறார்.

நடைபெற்று முடிந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் மூன்று பருவத்திலும் லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணியே மகுடம் சூடியிருந்த நிலையில் ஜப்னா கிங்ஸ் அணி மிகவும் வெற்றிகரமான அணி என்பதை நிரூபித்துள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ள லங்கா பிரீமியர் லீக்கின் தொடர், லீக் வரலாற்றில் முதன்முறையாக ஏலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது, இது ஏல முறையை உள்ளடக்கிய உலகளவில் மூன்றாவது கிரிக்கெட் லீக் தொடர் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

இந்த ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 20 ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான ஏலம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஷங்ரிலாவில் இடம்பெற உள்ளமை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பற்றி எரியும் அடிவயிறு

முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கொழும்பில் புதிய சொகுசு இல்லம் ஒன்று வழங்கப்பட்டிருப்பது தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரிக்கும்தமிழ்அரசுக்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணாக்கியனுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் வார்த்தைப் போர் நடந்திருக்கிறது. இது இத்தனை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவரான கோட்டாபயவுக்கு புதிய சொகுசு மாளிகையா என்கிற ஆச்சரியத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

ஸ்டான்மோர் கிரசென்ட்டில் அமைந்துள்ள புதிய சொகுசு மாளிகையே கோட்டாபயவுக்கு அரசினால் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவரர் என்ற அடிப்படையில் அவருக்கு இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் அவருக்கு வழங்கப்படும் இரண்டாவது வசதி இது. இதற்கு முன்னர் அவருக்கென அரசு ஒதுக்கியிருந்த மாளிகையை, அதிக சத்தம் அந்தச் சூழலில் நிலவுகின்றது என்று தெரிவித்து கோட்டாபய நிராகரித்த காரணத்தால் புதிய மாளிகை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் அரசுத் தலைவர்கள் சட்டத்திற்கு இணங்க அரசினால் வழங்கப்படும் வீடொன்றில் வாழ்வதற்கு உரிமையுடையவர்கள். எவ்வாறாயினும், அது அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைக்காகப் பதவிக் காலத்திற்குப் பின்னரும் அவர்களுக்கு வழங்கப்படும் வசதி. ஆனால், நாட்டுக்கு ஆற்றிய சேவையைவிட நாட்டை நாசமாக்கிப் படு பாதாளத்தில் தள்ளிய ஒருவருக்கும் அதே சலுகைகள், அதிலும் அவர் விரும்பியவாறான சலுகைகளை வழங்குவது என்பது, அவரது நடவடிக்கைகளால் பெரிதும் பாதுக்கப்பட்டு மிக மோசமான வாழ்க்கையை எதிர்கொண்டுள்ள மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பதவியில் இருந்து மக்களால் வெளியேற்றப்பட்டவர் முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக் ஷ, தகனது உயிரைக் காத்துக்கொள்ள கிட்டத்தட்ட அவர் நாட்டைவிட்டுத் தப்பியோடியிருந்தார். அதற்கு முன்னதாகத் தான் எடுத்த சில தவறான முடிவுகள் காரணமாக நாடு பாதிப்பை எதிர்கொண்டுள்ளது என்பதை மக்கள் முன் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். அப்படிப்பட்ட ஒருவருக்கு பொதுமக்கள்பெரிதும்துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில் சொகுசு வசதிகள் வழங்கப்படுவது என்பது மக்களின் மனங்களை நோகடிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சருக்கு வழக்கமாக ஒதுக்கப்படும் வீடே கோட்டாபயவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. தான் சொந்த வீட்டிலேயே இருக்கிறார் என்றும் எந்தவொரு அரச வீட்டையும் தான் பெற்றிருக்கவில்லை என்றும் அயலுறவுத்துறை அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனாலும் இந்த வீட்டை கோட்டாபயவுக்கு வழங்க அயலுறவுத்துறை அமைச்சரின் சம்மதம் பெறப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்த வீட்டில் முன்னர் மறைந்த அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இருந்திருக்கிறார்.

கோட்டாபய ராஜபக் ஷவுக்கு முதலில் மலலசேகர மாவத்தையில் ஒரு அரசு மாளிகை ஒதுக்கப்பட்டது, அது பலத்த பாதுகாப்புடன் பாதுகாக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட மாளிகைப் பகுதி 'மிகவும் சத்தமாக உள்ளது' எனக் கூறி ராஜபக்ஷ அந்த வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்., அங்கு அவருக்குப் கடும் பாதுகாப்பு வசதி இருந்தபோதும் அதில் குறைபாடுகள் இருப்பதாக அவர் முறைப்பட்டார். பின்னர் ராஜபக்ச தனது மிரிஹானா இல்லத்திற்குச் சென்றார், அதுவும் பலத்த பாதுகாப்புடன் இருந்தது. அங்கிருந்தபடியே அவர் புதிய மாளிகையைக் கோரிப் பெற்றிருக்கிறார்.

கோட்டாபயவின் முறையற்ற நடவடிக்கைகள் காரணமாக மக்கள் பட்டினி கிடக்க, நாடு வங்குரோத்து அடைந்திருக்க அவர் மட்டும் முழுமையான பாதுகாப்புடன் சொகுசு மாளிகையில் வசதியாக வாழ்வதென்பது மக்களின் அடி வயிறுகளைப் பற்றியெரிய வைக்காமல் வேறென்ன செய்யும்?

# வரிசை யுகம் மீண்டும் வெகுவிரைவில் வரும்

## சம்பிக்க ஆரூடம்



பொருளாதாரபாதிப்புக்குத் தற்காலிக இடைவேளைமாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில்வரிசையுகம் மீண்டும் தோற்றம் பெறும்.

கடன் மறுசீரமைப்பின் தாக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு பின்னரே வெளிப்படும். ஆகவே, அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுவது கட்டாயமாகும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நாட்டின்தற்போதையஇயல்பு நிலை தற்காலிகமானதே. வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாத காரணத்தால் கடந்த ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை வங்குரோத்து நிலையை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

4.5 பில்லியன் டொலர் அரசமுறைகடன்களைசெலுத்துவதை அரசாங்கம் தவிர்த்துள்ளது. தற்போது 3 பில்லியன் டொலர்கள் மாத்திரமே வெளிநாட்டு கையிருப்பில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் 1.5 பில்லியன் டொலர் சீனாவால் வழங்கப்பட்ட கடனாகும்.அந்த கடன் இருப்பைப் பாவிக்கமுடியாது. ஆகவே தற்போதும் வெளிநாட்டுகையிருப்பின்தன்மை நிலையற்றதாக உள்ளது.

வரிசை யுகம்,பழைய முரண்பாடுகள், பழைய கலவரங்கள் மீண்டும் தோற்றம் பெறும். ஆகவே தற்போதையநிலைமையை சரிஎன்றுகுறிப்பிடமுடியாது.

நெருக்கடிகளுக்குத் தற்காலிக இடைவெளிவழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக உறுதியான திட்டத்தை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். தற்போதுதேசியகடன்செலுத்தப்படுகிறது,வெளிநாட்டு கடன்கள் செலுத்தப்படுவதில்லை.

கடன் மறுசீரமைப்புக்களின் பின்னர் வட்டியுடன் வெளிநாட்டு கடன்களை நிச்சயம் செலுத்த நேரிடும். 2024 ஆம் ஆண்டு கடன் மறுசீரமைப்புடன் தோற்றம் பெறும். மாறுப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

தேசிய கடன் மறுசீரமைப்பக்கப்படும் போது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும்வங்கிவைப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள். உழைக்கும் மக்களின் மீது பொருளாதாரப் பாதிப்பின் சுமை திணிக்கப்பட்டுள்ளது.

நடுத்தர மக்களே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வட்டி வீதம் தொடர்பில் தற்போது விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

பணவீக்கம், வட்டிவீதம் ஏன் அதிகரிக்கப்பட்டது. மத்தியவங்கியின்முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 3 ரில்லியன் ரூபா நாணயங்களை அச்சிட்டார்.

நாணயம் அச்சிடுவதை வரையறை செய்யுமாறு கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திடம் பல முறை வலியுறுத்திய போது அப்போதைய நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த அஜித் நிவாட் கப்ரால் நாணயம் அச்சிடுவதால் பணவீக்கம் அதிகரிக்காது என நாடாளுமன்றத்தில் பொறுப்பற்ற வகையில் உரையாற்றினார்.

பொருளாதாரப் பாதிப்பைத் தீவிரப்படுத்தி விட்டு தற்போது அவர் சுகபோகமாக வாழ்கிறார். ஆனால் பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூறத்தேவையில்லாதவர்கள் தற்போது மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதாரப் பாதிப்பால் மூளைசாலிகள் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்வங்கிகடன் வட்டி வீதம் அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் மிகுதியாகவுள்ள தொழில்முயற்சியாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் துரிதமாகச் செயற்பட வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வுகாண்பதாகக் குறிப்பிட்டுக்கொண்டு நாட்டு மக்களையும், தொழில் முயற்சியாளர்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டால் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுவார்கள்.

படித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் நாடு அறிவார்ந்தவர்களற்ற பாலைவனம்போல்மாற்றம் பெறும். அதன் பின்னர் எவர் நாட்டை ஆட்சி செய்தாலும் ஒருபோதும் முன்னேற முடியாது. - என்றார். (05)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமற்றும்சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளனம் ஆகியவற்றின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்புநேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

கொழும்பில்நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளளத்தின் தலைவர்களுக்கான மாநாடு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்தமாநாட்டில்தெற்காசியாவிற்கான உலக அனர்த்த அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டதோடு அதன் பிரதியும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த சந்திப்பின்போது கையளிக்கப்பட்டது.

இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக மேற்படி பிரதிநிதிகள்ஜனாதிபதியிடம்எடுத்துரைத்தனர்.

சட்டம் அமுலாக்கப்படுவதால்இலங்கைசெஞ்சிலுவைச் சங்கத்தை மேலும் பலப்படுத்திக்கொள்ள முடியும்என்பதோடு, பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக சேவைகளை செயற்திறன் மிக்கதாக முன்னெடுக்கமுடியும்என்றும் அவர்கள்வலியுறுத்தினர். (05)

# சிலவங்கி அதிகாரிகள் மோசடிகளில் ஈடுபாடு

## நீதி அமைச்சர் விஜயதாஸ குற்றச்சாட்டு

வங்கி அதிகாரிகள் சிலர் அடகு சொத்து மோசடிகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ஏல விற்பனைகளின்போது சூழ்ச்சியான வகையில் அந்த சொத்துக்களை தங்களின் ஆள்களையேகொண்டு கொள்வனவுசெய்யும்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனநீதிஅமைச்சர்விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறை எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பானசபைஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாட்டின்அடகுச்சட்டத்தின் கீழ்சொத்துக்களைவங்கி, நிதி நிறுவனத்தில் அடகு வைத்த பின்னர்அடகுபணத்தைமீளச் செலுத்தமுடியாமல்போனால், மாவட்டநீதிமன்றத்தில்வழக்கு தொடரப்படும்.

இதில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளுக்கு விசேட சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் உடன்படிக்கைக்கு அமைய, யாருக்காவது அடகு பணத்தை மீளச்செலுத்த முடியாமல் போனால், அந்த வங்கிகளின் நிறைவேற்றுச் சபையின் தீர்மானத்தின் ஊடாக அந்தச் சொத்துக்களை ஏல விற்பனைக்கு விட முடியும்.

பின்னர், அதுதொடர்பான சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்து தனியார் வங்கிகளுக்கும் அந்த சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. இதன்படியே இப்போது நடக்கின்றது.

இந்நிலையில், சில வங்கிகளில் அதிகாரிகள் மிகவும் மோசடிக்காரர்களே. வேண்டுமென்றேகொடுக்கல்-வாங்கல்காரர்களைஏமாற்றி, சூழ்ச்சியான வகையில் அந்த சொத்துக்களைத் தங்களின் ஆள்களை அனுப்பி அவற்றை விற்கும் செயற்பாடுகள் நடக்கின்றன.

இதேவேளைமத்திய வங்கியின்அனுமதியைப் பெற்றதுஎன்றுகூறப்படும் நிதி நிறுவனங்கள் பல உள்ளன. அந்த நிறுவனங்களில் பலர் தமது வாகனங்கள் உள்ளிட்டசொத்துக்களை அடகு வைத்து பணம் பெறுகின்றனர்.

அதன்போது அவர்களின் காணிகள், வீடுகள் உள்ளிட்ட மற்றைய சொத்துக்களையும் எழுதிக்கொள்கின்றனர். அவற்றையும்அந்தபணத்தை மீள செலுத்திய பின்னரே கையளிப்பார்கள்.

இதன்படி, நொத்தாரிஸ் சட்டத்தில் திருத்தத்தை முன்வைத்துள்ளோம். ஆனால், பலநொத்தாரிஸ்கள் எந்தவித பொறுப்புகளும் இன்றிஉறுதிப்பத்திரங்களை எழுதுகின்றனர். இதன்படி,



இனிநொத்தாரிஸ்கள்உறுதிப்பத்திரங்களைஎழுதும்போது, குறிப்பாக, கையளிப்பு உறுதிப்பத்திரமாகஇருந்தால்,அதன் கொடுக்கல்-வாங்கல்நடந்தது என்பதை உறுதிப்படுத்தியே அதனை எழுத வேண்டும்.

இல்லாவிட்டால், அவர்கள்தண்டனைக்குஉள்ளாக்கப்படுவார்கள். அவ்வாறான திருத்தங்கள் அடங்கிய திருத்தச்சட்டத்தை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க இருக்கிறோம். - என்றார். (05)

# ஜயசுந்தர, கப்ரால், பசிலுக்கு பொருளாதார பாதிப்பு இல்லை

## நடுத்தர மக்களே பலிக்கடா என்கிறார் அநுர



பொருளாதாரப்பாதிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்என்று குறிப்பிடுவதைஏற்றுக்கொள்ள முடியாது. பி.பி.ஜயசுந்தர, கப்ரால், பஷில்ஆகியோருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை அவர்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லாத நடுத்தர மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதுவே உண்மை என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட இலங்கையின்கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத் திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் பலம் அந்த நாட்டின் தேசிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளிலேயே தங்கியுள்ளது. ஆனால்கடந்த காலங்களில்அரசாங்கங்களால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டங்கள் இவ்வாறு பொருளாதாரத்தைஅபிவிருத்தி செய்வதாக அன்றி வேறு நோக்கங்களைக்கொண்டதாக அமைந்துள்ளன.

அரசியல்தரப்பினர்எடுத்த தவறான தீர்மானங்களால் தேசிய உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய வேண்டும்.

அனைத்து துறைகளினதும் ஆரம்பம் சிறிய அளவில்இருந்தேதொடங்கிபெரிய வியாபாரமாக விரிவடைகின்றது. அவ்வாறான வியாபாரம் வீழ்ச்சியடைந்தால் மீண்டும்எழுவதுஇலகுவானது அல்ல.

ஆனால் அந்த துறைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைப்பார்த்தால் மீண்டெழமுடியாதநிலைமை காணப்படுகின்றது.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களும்பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக லீசிங் முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்திருந்தால் தற்போ தைய நிலைமையில் அந்த வாகனங்களை லீசிங் நிறுவனங்கள் கையகப்படுத்துகின்றன.

அவ்வாறானசெயற்பாடுகளை நிறுத்த வேண்டும். அத்துடன் வங்கிகளுடன் கடன்களை பெற்றிருப்பவர் பொருளாதார நிலைமைகளால் அவர்கள் எதிர்பார்க்கும் வருமானம் கிடைக்காது போகலாம்.

வங்கிகளில் கடன்பெற்றவர்கள் அதிக வட்டியில் எவ்வாறு தவணைகளைச் செலுத்த முடியும். 30 சதவீதம் வரையில்வட்டியைசெலுத்தும் நிலைமை ஏற்படுகின்றது.

மிகவும் கஸ்டப்பட்டு வியாபாரத்தைக் கட்டியெழுப்பியவர்கள் அரசாங்கத்தின்தவறானபொருளாதாரக் கொள்கைகளால் வியாபாரத்தில்வீழ்ச்சியடையும்நிலைமை ஏற்படுகின்றது.

இப்படிஇருந்தால்எவ்வாறு அவர்களால்மீண்டெழமுடியும். இதனால் இது தொடர்பில் துரித தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இதேவேளை இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தும் போது தேசிய உற்பத்தியாளர்கள்பாதிக்கப்படலாம். இதனால் இது தொடர்பில் அவதானம் செலுத்தியே தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அத்துடன்தேசியஉற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத்துரிதமாக தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இயற்கைகாரணிகளால் பொருளாதாரம்பாதிக்கப்பட்டு நாடுவங்குரோத்துநிலைக்கு செல்லவில்லை. கடந்த அரசாங்கம் எடுத்த தன்னிச்சையான தவறான தீர்மானங்களால்நாடுவங்குரோத்து நிலையடைந்தது.

பொருளாதாரப்பாதிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்என்று அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொருளாதாரப்பாதிப்பை ஏற்படுத்திய முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி ஜயசுந்தர,மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும்முன்னாள்நிதியமைச்சர் பஷில்ராஜபக்ஷஆகியோருக்கு பொருளாதாரப் பாதிப்பு தாக்கம் செலுத்த வில்லை அவர்கள் சுகபோகமாகவே வாழ்கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லாத நடுத்தர மக்கள் தான் பொருளாதாரப் பாதிப்பால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.இதுவே உண்மை. - என்றார். (05)

# நிவாரணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நேர்ந்துள்ளது?

## கபீர் ஹாசிம் கேள்வி



பொருளாதாரரீதியில்பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும்நடுத்தரதொழில்முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையினருக்கு நிவாரணம் வழங்குமாறு மத்திய வங்கி விடுத்த சுற்றறிக்கைக்கு அமைய தொழில் துறையினருக்குநிவாரணம்கிடைக்கப்பெறவில்லை.

நிவாரணம் வழங்கலுக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு நேர்ந் தது என்ன என்பதை ஆராயவேண்டும்எனஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு அண்மையில் ஆற்றிய உரையில் நான்கு பிரதான வழிமுறைகளில் 2048 ஆம் ஆண்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக்குறிப்பிட்டார். பொருளாதாரப்பாதிப்புக்கு முன்னனிவகித்தவர்களுடன் ஒன்றிணைந்து ஜனாதிபதி செயற்படுகிறார்.ஆகவே, 2048 ஆம்ஆண்டுக்குமுன்னர்1948 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு செல்லாமல் இருக்க வேண்டும்.

நாட்டின்கடன்நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக சர்வதேசநாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக வங்கி வட்டி, கடன் வட்டி வீதம், மின்சார கட்டணம் , நீர் கட்டணம் உட்பட சேவைதுறைகளின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளன. வங்கி கடன் வட்டி வீதம் அதிகரிப்பால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர், கைத்தொழில்முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் தொழில் முயற்சியாளர்கள்மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொழிற்துறையினர் தாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பில் அரசாங்கத்திடம் பலமுறை கோரிக்கை முன்வைத்தும் இதுவரை நியாயமான தீர்வு ஒன்று கிடைக்கப் பெறவில்லை.

வங்கி கடன் தவணை செலுத்தலில் கால அவகாசம் வழங்கல் அல்லது வட்டி மறுசீரமைப்பு உள்ளிட்ட பிரதான கோரிக்கைகளை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் முன்வைத்துள்ளார்கள். தொழில்முயற்சியாளர்களின் கடன்களுக்கு நிவாரணம் வழங்குமாறு மத்திய வங்கி கடந்த ஆண்டு ஜூலை மாதம் விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மத்தியவங்கியின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கப் பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிவாரணம் தொழில் முயற்சியாளர்களுக்குக் கிடைக்கவில்லை.

அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள், முக்கியதொழில் பிரமுகர்கள் ஆகியோருக்கு இடையிலான நல்லிணக்கத்தின் அடிப்படையில் தான் நிவாரணம்வழங்கப்படுகிறது. ஆகவே மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையைசெயற்படுத்தாததுஏன் என்பதுதொடர்பில்அரசாங்கம் ஆராயவேண்டும். - என்றார். (05)

# சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினரின் வங்கி கடன்கள் மறுசீரமைக்கப்படவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா அரசிடம் கோரிக்கை



சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், கைத்தொழில் துறையினர் பெற்றுக்கொண்டுள்ள வங்கி கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் வீழ்ச்சியடைந்துள்ளதொழில் துறையை மேம்படுத்த முடியாது.

பாதிக்கப்பட்டுள்ளதொழில் துறையினருக்கு நிவாரணம் வழங்க அவசர சட்டம் ஊடாக நடைமுறைக்குசாத்தியமான சட்டங்களை அரசாங்கம் இயற்ற வேண்டும்.

அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வாதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தரதொழில்முயற்சிகள் உட்பட இலங்கையின் கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானசபைஒத்திவைப்பு பிரேரணையைமுன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பின் காரணமாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் உட்பட கைத்தொழில் துறையினர் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள கொள்கை திட்டங்களால் தொழிற்துறையினர் பலர் தற்கொலைசெய்துள்ளார்கள். பலர்வாழமுடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியா ளர்கள், கைத்தொழில் துறையினரின் முறையற்ற தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடையவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலானஅரசாங்கம்எடுத்த தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. இதனால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தொழிற்றுறை ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளார்கள்.

பணவீக்கம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வங்கிகடன்களின்வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டது.இதனால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நிதி கட்டமைப்பு, உற்பத்தி பற்றாக்குறை, அரச கொள்கை பலவீனம், பூகோளகாரணிகள்உள்ளிட்ட விடயங்கள்தொடர்பில்விசேட கவனம்செலுத்த வேண்டும்.

பொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியில் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் வங்கிகளில்பெற்றுக்கொண்ட வங்கி கடன்களை மீள செலுத்தமுடியாமல்நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். கடந்த ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் தொழில்துறையினரின் 4000 அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

பல பில்லியன் ரூபா வங்கி கடன்களை பெற்றுக்கொண்டுள்ளஅரசியல்வாதிகள் உரிய காலத்தில் நிலுவை தொகைசெலுத்தாமல் உள்ள நிலையில் பொருளாதாரப் பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும்நடுத்தர தொழிற்துறையினரின்சொத்துக்களை அரசுடைமையாக்குவது முறையற்றது.

ஆகவே உரிய காரணிகளால் வங்கி கடன்களைத் திருப்பி செலுத்த முடியாமல் உள்ள தரப்பினரின் சொத்துக்களை கையகப்படுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும்.

அத்துடன் சிறு மற்றும் நடுத்தரதொழிற்துறையினர், கைத்தொழிற்துறையினர் பெற்றுக்கொண்டுள்ள வங்கி கடன்களை மறுசீரமைப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் வீழ்ச்சியடைந்துள்ள சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையை மேம்படுத்த முடியாது. ஆகவே, புதிய விடயங்களை உள்ளடக்கிய வகையில் சிறு மற்றும்நடுத்தரதொழிற்துறை சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தங்களின் தேவைகளுக்காக நாட்டின் அரசமைப்பை ஒருசில நாள்களுக்குள் மாற்றியமைத்தார்கள்.

அதுபோல் அவசர சட்டம் ஊடாக சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை சட்டத்தை திருத்தம் செய்ய அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார். (05)

# நாட்டின் ஊடகத்துறையை முடக்கி ஊழலை இல்லாதொழிக்க முடியாது

## இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



ஊடகத்துறையை முடக்கி நாட்டில் ஊழலை இல்லாதொழிக்க முடியாது. ஊடகசுதந்திரத்தைப்பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை முறையற்றதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

ஒரு நாட்டின் வளம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய துறைகளில் தங்கியுள்ளது. ஏற்றுமதியை வளப்படுத்த வேண்டுமாயின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

தேசிய உற்பத்திகள் மேம்படுத்தப்பட வேண்டுமாயின் தேசியமட்டத்திலான தொழில் துறையினர் பாதுகாக்கப்பட வேண்டும்.

இறக்குமதியைக்குறைத்து ஏற்றுமதியை மேம்படுத்தினால் மாத்திரமே சாதகமான அபிவிருத்தி அம்சங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொருளாதாரப்பாதிப்பின் பின்னரான காலப்பகுதியில் தேசிய தொழில் துறை பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

தேயிலை, இறப்பர் என்பனபிரதானஏற்றுமதியாகக் காணப்படுகின்ற நிலையில் சிறு மற்றும்நடுத்தர தொழில் துறை முயற்சியாளர்கள் வங்கி கடன், மின்சார கட்டணம் அதிகரிப்பு,சேவை கட்டணம் அதிகரிப்பு ஆகிய நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபுறம்மூலப்பொருள்களின் விலையேற்றத்தால் கட்டட அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பலர் தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.பொருளாதாரப்பாதிப்பால்பெருந்தோட்ட தொழிலாளர்கள், தேயிலை சிறு தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவேதொழில்முயற்சியாளர்கள் தொழில் துறை ரீதியில் முன்னேற்றமடைய அரசாங்கம் ஒத்துழைப்பு அல்லது நிவாரணம் வழங்க வேண்டும்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஊடகத்துறையை முடக்கும் நோக்கத்தில் அரசாங்கம் செயற்படுகிறது. ஊடகத்தை முடக்கி நாட்டில் ஊழலை ஒழிக்க முடியாது.

ஊடகங்கள் ஊடாகவே ஊழல்வாதிகள் வெளிவருகிறார்கள். ஆகவே ஊடகத்துக்கு எதிரான செயற்பாட்டை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் குறித்து நிலைப்பாட்டை குறிப்பிட முடியாது. ஆனால் அவர் கைது செய்யப்பட்ட விதம் நாடாளுமன்றசிறப்புரிமைகளுக்கு அப்பாற்பட்டது என்பது தெளிவாக விளங்குகிறது. - என்றார். (05)